# திசை
THISAI

திசை 1 | 29-9-1989 வெள்ளிக்கிழமை | விலை : ரூபா 4-00 | முகம் 38


## ராஜினி திரணகம மரணம்;
### மக்களுக்கும் மாணவருக்கும் பெரும் தாக்கம்

வைத்தியக் கலாநிதி ராஜினி திரணகமவின் அகால மரணம் குறித்து யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் வெளியிட்டுள்ள அறிக்கை கூறுவதாவது:

"காலஞ்சென்ற கலாநிதி திரணகம அவர்கள், மருத்துவ பீடத்தில் உடற்கூற்றியல் துறையை, ஏறத்தாழ தனியொருவராகவே சிறப்புடன் நடாத்திவந்துள்ளார். இவரது மரணம் ஏற்கனவே பலவீனப்பட்டுள்ள எமது பல்கலைக்கழக மருத்துவபீடம் தொடர்ந்து சரிவர இயங்குவதற்குப், பாதகமாக அமைந்துள்ளது. இந்தக் கொடூரக் கொலை பற்றி, மூதவை தனது வன்மையான கண்டனத்தைத் தெரிவிப்பதுடன், யாழ். பல்கலைக்கழகம் 29-9-89 வெள்ளியன்றுவரை

(12ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கு - கிழக்குப் பகுதிகளில் யுத்தநிறுத்த மீறல்கள்

**வடக்கு — கிழக்கில் யுத்த மீறல்கள் நிகழ்ந்துள்ளதாக பரஸ்பரம் ஒருவரையொருவர் குற்றஞ்சாட்டி வருகின்றனர். திங்களன்று பண்டத்தரிப்பு சந்தையடியில் நிகழ்ந்த அசம்பாவிதத்தின்போது இருவர் சூட்டுக்குப் பலியாகியுள்ளனர். இந்த அசம்பாவிதத்துக்கு விடுதலைப் புலிகளே காரணம் என்று இந்தியாவும், ஆனால் இதற்கு அமைதிப்படையே பொறுப்பென்று விடுதலைப் புலிகளும் கூறுகின்றனர்.**

மேலும் கிளிநொச்சி, முல்லைத்தீவு பகுதிகளில் தமது ஆட்கள் கைது செய்யப்படுவதாக விடுதலைப் புலிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இதேவேளை யாழ்ப்பாணப் பகுதியில் பரவலாக இனந் தெரியாதோரால் பல கொலைகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. அவற்றுள் யாழ். பல்கலைக்கழக உடற்கூற்றியல் துறைத் தலைவி ராஜினி திரணகம சுட்டுக் கொல்லப்பட்டமை, வண்ணார்பண்ணை சிவன்கோவிலுக் கருகாமையில் இரண்டு இளைஞர்களின் உடல்கள் தலை துண்டிக்கப்பட்டுக் காணப்பட்டமை, புங்குடுதீவைச் சேர்ந்த பாடசாலை மாணவன் ஊர்காவற்றுறைப் பகுதியில் வெட்டிக் கொல்லப்பட்டமை என்பனவும் அடங்குகின்றன.

இது சம்பந்தமாக, ஆயுதக் களைவு நிறுத்தத்தைப் பயன்படுத்தி, விடுதலைப் புலிகள் ஜனங்களைக் கொல்வதாக இந்தியாவும் ஈ. பி. ஆர். எல். எவ்வும் கூறுகின்றன. ஆனால் அதேவேளை இவ்வாறு கொல்லப்படுபவர்கள் தமது ஆதரவாளர்கள் என்றும் இதை ஈ. பி. ஆர். எல். எவ். செய்வதாகவும் விடுதலைப் புலிகள் சொல்வதாக இந்தியவானொலி செவ்வாயன்று அறிவித்துள்ளது. அத்தோடு கிழக்குப் பகுதிகளிலும் சில அசம்பாவிதங்கள் நடந்துள்ளதாகச் செய்திகள் வந்துள்ளன.

இதற்கிடையில் தென்பகுதியில் யுத்த நிறுத்தம் மேற்கொள்ளப்பட்ட 24 மணித்தியாலங்களுக்குள் மீறல் நிகழ்ந்துள்ளதாகவும் செய்திகள் வந்துள்ளன. ஆனால், தென்பகுதி யுத்த நிறுத்தம் ஜே. வி. பியினரது அபிப்பிராயம் பெறப்படாது மேற்கொள்ளப்பட்டது என்பதும், குறிப்பிடத்தக்கது.

பரவலாக யுத்த நிறுத்த மீறல்கள் நிகழ்ந்து கொண்டிருந்தாலும், நடைமுறைக்கு வந்துள்ள மேற்படி யுத்த நிறுத்தம் நீடிக்க வேண்டும் என்பதும் அது நிலையான பயனைத்தரவேண்டும் என்பதுமே திசையின் விருப்பமாகும்.

## 600 அமைதிப்படை வெளியேற்றம்

கடந்த சனிக்கிழமை, 600 அமைதிப்படையினர் காங்கேசன்துறையிலிருந்து இந்தியாவுக்கு அனுப்பப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இம்முறையில் படைவிலகல் தொடர்ந்து நடைபெறுமானால், எதிர்வரும் டிசம்பர் மாதத்திற்குள் இந்திய அமைதிப்படை இலங்கையைவிட்டுப் பூரணமாக வெளியேறிவிடும் என்று, நம்பப்படுகிறது.

## வியட்நாம் படை வெளியேறியது

கம்புச்சியாவில் பதினொரு ஆண்டுகள் நிலைகொண்டிருந்த வியட்நாம் துருப்புக்களின் கடைசி அணியும், கடந்த செவ்வாயன்று கம்புச்சிய எல்லையைக் கடந்து வெளியேறியது.

வியட்நாம் பகுதியிலுள்ள மக்கள் கையசைத்தும், மலர்களைக் கொடுத்தும் தாயகம் திரும்பிய தமது படையினரை வரவேற்றனர்.

## மத்திய அரசும் மாகாண அரசும் பேச்சுவார்த்தை

வெளிவிவகார அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன தலைமையிலான குழுவினருக்கும், வடக்கு–கிழக்குமாகாண முதல்வர் வரதராஜப்பெருமாள் தலைமையிலான குழுவினருக்கும் இடையில், இரண்டு மணித்தியாலப் பேச்சுவார்த்தை கடந்தவாரம் திருகோணமலையில் நிகழ்ந்தது.

இப்பேச்சுவார்த்தையின் போது மாகாண அரசுக்கான அதிகாரப் பரவலாக்கல், மாகாணப் பொலிஸ் படை அமைப்பு சம்பந்தமான விடயங்கள் முக்கிய அம்சங்களாக எடுத்துக்கொள்ளப்பட்டன.

## ஒன்றுதிரண்டு போராடினால் சம்பள உயர்வைப் பெறலாம்

"சுருட்டுத் தொழிலாளர்கள் நூறு ஆண்டுகளுக்கும் மேலாகப் பல்வேறு சம்பள உயர்வுப் போராட்டங்களை நடாத்தி வந்துள்ளார்கள். இனக்கலவரங்களினாலும், ஸ்ரீலங்கா பேரினவாத அரசின் மூர்க்கத்தனமான நடவடிக்கைகளாலும் சுருட்டுத் தொழில் பல பின்னடைவுகளுக்கு இலக்காகியுள்ளது. இந்நிலையில் நாட்டின் விலைவாசி உயர்விற்கு ஏற்றவகையில் சுருட்டுத்தொழிலில் ஈடுபடுவோர் சம்பள உயர்வைப் பெற முடியவில்லை." இவ்வாறு ஏழாலூர் புகையிலைச் சங்க மண்டபத்தில் நடைபெற்ற சுருட்டுத் தொழிலாளரின் பொதுக் கூட்டத்தில் ஈழத் தொழிற்சங்க சம்மேளனத்தின் அமைப்பாளர் திரு. வி. ஏ. கந்தசாமி கூறினார். அவர் மேலும் கூறியதாவது: "சுருட்டுத் தொழிலாளர்கள் அனைவரும் ஒன்று திரண்டு போராடுவதன் மூலம்தான் சம்பள உயர்வைப் பெறமுடியும்"

## கொழும்புச் செய்தி

— யாழ் குருவி —

### தகனம்—பலவிதம்

தென் பகுதியில் இப்போ தீவைப்புச் சம்பவங்கள் வன்செயலின் புதிய ஆயுதமாகப் பாவிக்கப்பட்டு வருகின்றன. ஏராளமான அரசாங்கக் கட்டிடங்கள் எரியூட்டப்பட்டுள்ளன. தீவிரவாதிகளால் தீயிடப்பட்ட கட்டிடங்கள் எரிந்து கொண்டிருக்க, அதில் சம்பந்தப்படாத சுற்றுவட்டாரத்திலுள்ள இளைஞர்கள் கொல்லப்பட்டு, அத்தீயினில் போட்டுக் கொளுத்தப்படுவதாகச் செய்திகள் வந்துள்ளன. கடந்த வாரம் எந்தரமுல்ல புகையிரத நிலையம் தீயிடப்பட்டு எரிந்தபோது, அதன் சுற்றுவட்டாரத்தைச் சேர்ந்த ஐந்து இளைஞர்கள் கொல்லப்பட்டு, அத்தீக்குள் வீசப்பட்டு அரையும் குறையுமாக எரிந்து கிடந்ததை, மக்கள் பலர் கண்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

### ஓட்டம்—புதுவிதம்

ஓடிய குதிரை படுத்துவிட்டது. முடங்கிக் கிடந்த குதிரை ஓடத்தொடங்கியுள்ளது. ஆம்! இதுகாலவரை ஓடாமலும் அரையும் குறையுமாக இழுபட்டுவந்த கொழும்பு — யாழ். நொண்டிப் புகையிரதச் சேவை தற்போது நிமிர்ந்து ஓடத்தொடங்கியுள்ள அதேவேளை, சிங்களப் பகுதிகளில் ஓடிய ரயில்கள் ஓடாமல் முடங்கத் தொடங்கியுள்ள நிலையைப் பார்த்துச் சிங்கள மக்கள், "இதுவும் ஒரு காலம்" என அங்கலாய்க்கிறார்களாம்.

### இது—தனிவிதம்

கொழும்பின் சகல பகுதிகளிலும் இது காலவரை இருந்து வந்த மாநகரசபைப் பொது மலசல கூடங்கள் எல்லாம் இடிக்கப்பட்டு, அவ்விடங்களில் கடைகள் சட்டப்பட்டு அவ்வப்பகுதி ஆளுங்கட்சி ஆதரவாளர்களுக்குக் கொடுக்கப்படுகிறதாம்' இதனால், இயற்கை உபாதைகளுக்குள்ளானோர் அவசர அவசரமாக வீதி ஓரங்களில், தமது உபாதைகளைத் தீர்த்துக் கொள்கிறார்களாம். கொழும்பு சர்வதேச விமான நிலையத்தின் வெளிப்பகுதியில் கூட மலசல கூடம் இல்லாததால், அங்கு வழியனுப்ப வருவோர் அந்தரப்பட்டு வீதியோரங்களில் தம் 'காரியங்களை' ஆற்றிக் கொண்டிருப்பதைப் பார்த்து, விமான நிலையத்திலிருந்து வெளிவரும் வெளிநாட்டார் படம் பிடித்துச் செல்கின்றனராம்!

## தமிழ்பேசும் சிங்களவர்கள்?

"நாட்டின் பிரச்சினையை நாம் முதலில் தீர்க்கவேண்டும். தமிழ் மக்கள் பிரச்சினையை, தமிழ் பேசும் முஸ்லிம்கள் பிரச்சினையை, தமிழ் பேசும் சிங்களவர் பிரச்சினையை நாம் தீர்க்கவேண்டும். நீர்கொழும்பு, வென்னப்புவ போன்ற பகுதிகளில் தமிழ் பேசும் சிங்களவர்கள் உள்ளனர்."

கடந்த வெள்ளியன்று நாடாளுமன்றத்தில் பேசும்போது கடற்தொழில் அமைச்சர் ஜோஸப் மைக்கேல் பெரேரா இவ்வாறு கூறினார்.

மேல் மாகாணத்தில் — நீர்கொழும்புப் பகுதிகளில் வசித்து வந்த தமிழ்க் கத்தோலிக்கர்கள் சிங்களத்தைக் கல்வி மொழியாகக் கொண்டதில், சுமார் நாற்பது ஐம்பது வருடங்களுக்குள்ளேயே சிங்களவராக மாறினர். இவர்களையே "தமிழ்பேசும் சிங்களவர்கள்", என அமைச்சர் தலைகீழாகக் குறிப்பிடுகிறார்.

உண்மையில் அவர்கள் சிங்களம் பேசும் தமிழர்கள். வரலாற்றைத் திரிப்பதில் சிங்கள அரசியல்வாதிகளுக்குரிய ஈடுபாடு இன்றும் நீடிப்பது, துரதிர்ஷ்டமானதே!

'சற்றடே றிவியூ'வின் சகோதர வாரப் பத்திரிகை

# பனம்பழத்தில் சாராயம்: சில விளக்கங்கள்

கடந்த 8.9.89ஆம் திகதிய 'திசை'யில் ''இணைதல்'' பகுதியில், புங்குடுதீவைச் சேர்ந்த சு. வி. என்பவர், ''பனம் பழத்திலிருந்து சாராயம்; அவசியம் தானா?'' என்ற தலைப்பில் கடிதமொன்றை எழுதியிருந்தார். அது தொடர்பாக சபையின் ஆராய்ச்சி உத்தியோகத்தர் என்ற வகையில் சில விளக்கங்களைச் சொல்ல விரும்புகிறேன்.

1. யாழ்ப்பாணத்தில் பனங்கிழங்கு உற்பத்தி வீழ்ச்சிக்கான காரணங்கள், (அ) பனை மரங்கள் கண்மூடித்தனமாக பலதரப்பாராலும் சேதமாக்கப்படுவது அல்லது தறிக்கப்படுவது, (ஆ) பனம்பழங்களை பெருமளவில் சேகரித்து, பாத்திபோட்டு,சந்தைப்படுத்த முடியாத அண்மைக்கால நிகழ்வுகள், (இ) தொடர்ந்து வரும் பாதகமான காலநிலை — (அதிக வரட்சி). இவற்றை நிவர்த்தி செய்வது சபையின் இயல்புக்கு அப்பாற்பட்டவை.

2. ஜேர்மனிய ஆராய்ச்சியாளர் பனம் பழம் பல்வகை ஊட்டச்சத்து நிரம்பியதென்று கண்டுபிடித்ததாக சபை அறிவித்தற்கும், பனம் பழத்திலிருந்து மதுசாரம் உற்பத்தி செய்யலாமென்ற ஆராய்ச்சி முடிவை சபை வெளியிட்டதற்கும் இடையில் எந்தவிதமான முரண்பாடுகளுமில்லை. ஊட்டச்சத்து நிரம்பிய உணவுப் பொருளாயினும் அதை மதுவத்தின் தாக்கத்திற்கு உட்படுத்தி மதுசாரம் வடிக்கலாமென்பது சாதாரண விஞ்ஞான உண்மையாகும்.

3. பனம்பொருளை உணவாகத் தருவதற்கு முன்னுரிமை தரவேண்டும் என்பதில் சபைக்கு கருத்து வேறுபாடு இருக்க முடியாது. அதே நன்நோக்கத்தை சபை நடைமுறைப்படுத்தியும் வந்துள்ளது. பனை அதிகமாகக் கிடைக்கின்ற இந்தியாவில்கூட பனம் பழத்தில் இருந்து பெறக்கூடிய பனங்கழி உதாசீனப் படுத்துகின்ற நிலையில், சபை பனங்கழியில் இருந்து பனுட்டு, ஜாம், கோடியல், பனம்பானம் போன்ற உணவு, பான வகைகளை நவீன முறைப்படி தயாரித்து மக்களுக்கு வழங்கி வருகின்றது. இவற்றைவிட புழுக்கொடியல், ஒடியல் மாவிலிருந்து 'பாம்போசா', ஒடியல் கூழ் போன்ற உணவுகளையும் பதனீரிலிருந்து கல்லாக்காரம், பனம்பாணி என்பவற்றையும் சபை உற்பத்தி செய்கின்றது. உற்பத்தி செய்யப்பட்ட இப் பொருட்கள் சபையின் விற்பனை நிலையங்களான 'கற்பக'ங்கள் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

4. பனையிலிருந்து இவ்வாறான உணவுற்பத்திகளை மேற்கொண்டபோதும், இவை மற்றைய உணவுப் பொருட்களுடன் பல்வேறு வழிகளிலும் போட்டிபோடக்கூடிய நிலையில் இல்லை என்பதும் உண்மை.




இந்த நிலையில், இலங்கையில் காணப்படுகின்ற ஏறக்குறைய 11 மில்லியன் பனைகளிலிருந்து பெறக்கூடிய பனம்பழங்களில் தற்போது 10% அளவே பயன்படுத்தக்கூடியதாக உள்ளது. ஆகவே மிகுதி 90% மான பனம் பழத்திலிருந்து பெறக்கூடிய பனங்கழி வீணாகவே போகின்றது. இதனாலேயே சபை அதிலிருந்து மதுசார உற்பத்திக்கான ஆய்வை மேற்கொண்டிருந்தது. இதில் சபை வெற்றியும் கண்டுள்ளது. இதிலிருந்து பெறப்படும் மதுசாரம் போதைப் பொருளாக மட்டுமன்றி பல்வேறு வைத்திய, இரசாயன, கைத்தொழில் சார்ந்த தேவைகளுக்கும் பயன்படுத்தப்பட முடியும். மேலும் எதிர்காலத்தில் இதன் மூலம் அந்நியச் செலாவணியைப் பெற்றுக் கொள்ளும் சாத்தியப்பாட்டினையும் நாம் அலட்சியம் செய்ய முடியாது.

ஆர். குகநேசன்,
பனை அபிவிருத்திச் சபை
யாழ்ப்பாணம்.

## செல்போர்னுக்கு....

திசையில் வெளியான டேவிட் செல்போர்னின் கருத்துக்கள் மிகவும் கண்டிக்கத் தக்கவை. இனப் பிரச்சினைக்கான தீர்வுக்காக நாம் எல்லோரும் ஏங்கிக் கொண்டிருக்கிறோம்— அதற்கான உண்மையான முயற்சிகளை வரவேற்கிறோம். இச் சமயத்தில் இனப்பிரச்சினைக்கான தீர்வு சாத்தியமில்லையென்று இவர் கருத்துத் தெரிவிப்பது வெறுப்பூட்டும் செயலாகும். மேலும் இவர், ''இன்று தேவைப்படுவது நாகரிகமான நல்ல நடத்தை எது வென்று தமிழ் - சிங்கள மக்களுக்கு ஞாபகப்படுத்துவதாகும் ...'' என்று சொல்கிறார். ''செல்போனின் மூதாதையரான ஆங்கிலேயர்கள் நாகரிகமாக நடந்திருந்தால் நாம் இன்று இனப்பிரச்சினைக்குள் சிக்கிக் கொண்டிருக்கமாட்டோம். இவரது நாடானபிரித்தானியா அதன் உள்நாட்டு வெளிநாட்டு விவகாரங்களில் எல்லாம் நாகரிகமாகத்தான் நடக்கிறதோ? அயர்லாந்துப் பிரச்சினையிலும், தென்னாபிரிக்க இனவெறி அரசுக்கு முண்டு கொடுப்பதிலும் இங்கிலாந்தின் ''நாகரிகம்'' தெரிகிறது. முதலில் செல்போர்ன் தனது நாட்டுக்கு உபதேசம் செய்யட்டும். Physician, heal thyself first.

தமிழ் மொழியும் உத்தியோக மொழியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதாகச் சொல்லப்படுகிறது. ஆனல் யாழ். பிரதம தபால் அலுவலகத்தில் அதன் பெயர்ப் பலகையில் முதலில் ஆங்கிலமும் பின்னர் சிங்களமும் இறுதியில் தமிழும் இடம் பெற்றுள்ளது. இது தவறுதலா அன்றேல் வேண்டும் என்றே செய்யப்பட்டதா?

க.பீற்றர்
சாவகச்சேரி.

## தமிழினத்தின் இன்னல்களைக் காட்டும் கதைகள்

திசை இதழ்கள் வரவரப் புதுமெருகு பெற்று வெளிவருவது பாராட்டப்படவேண்டிய விடயம்.

'தேசிய இனப் பிரச்சினைக் கதை' என்ற மகுடத்தின் கீழ் ஈழத்தின் மூத்த, இளைய எழுத்தாளர்கள் பலரது கதைகளை மறுபிரசுரம் செய்வதன் மூலம் தமிழினத்தின் கடந்த கால இன்னல்களைப் படம் பிடித்துக் காட்டுவது வாசகர்கட்குப் பெருவிருந்தாக அமைகிறது.

...... ஒவ்வொரு இதழிலும் ஒரு சிறு சதுரத்தை (Column) ஒதுக்கி, அதனுள் ஒரு சமகால ஈழத்து எழுத்தாளர் பற்றிய விபரங்களைப் பிரசுரிப்பதன் மூலம் எழுத்தாளர்களைப் பிரபல்யமாக்கி, அதன்மூலம் வாசகர்கட்கும் எழுத்தாளர்கட்கும் திசை தனது சேவையை வழங்கவேண்டும் என, மிகத் தாழ்மையாக வேண்டுகோள் விடுக்கின்றேன்.

அ. ஆரூரன்
கரவெட்டி.


திசை
THISAI

ஆசிரியர்:
மு. பொன்னம்பலம்

சந்தா விபரங்கள்:
(உள்நாட்டுத் தபாற் கட்டணத்தையும், வெளிநாட்டுத் தபாற் கட்டணத்தையும் உள்ளடக்கியது.)

இலங்கை
ஒரு வருடம்–ரூபா: 225/-
அரைவருடம்–ரூபா: 115/-

இந்தியா
ஒரு வருடம்–ரூபா: 800/-
(இந்திய ரூபா)

சிங்கப்பூர் / மலேசியா
ஒரு வருடம் –
யு.எஸ்.டொலர் 40

ஏனைய நாடுகள்
ஒரு வருடம் –
யு.எஸ்.டொலர் 60

காசோலைகள் அனைத்தும் நியூ ஈரா பப்ளிகேஷன்ஸ் லிமிட்டெட் (New Era Publications Ltd.) என்றே, எழுதப்பட வேண்டும்.

பத்திரிகை விநியோகம், சந்தாப்பணம், விளம்பரம் போன்ற நிர்வாகத் தொடர்பு முகவரி:

118, 4ஆம் குறுக்குத்தெரு,
த. பெ. 122,
யாழ்ப்பாணம்.



Persons living abroad who are desirous of subscribing to the ''THISAI'' are kindly invited to place their subscriptions with the Circulation Manager, New Era Publications Ltd., 118, 4th Cross Street, Jaffna, Sri Lanka and not with any distributor or Agent.

Governing Councillor
New Era Publications Ltd.



சொகுசு
சியெஸ்ரா, சுப்பர்போம்
மெத்தைகள்

மிக நாகரீகமான, நவமான
வீட்டுத்தளபாடங்களுக்கு
பெயர் பெற்ற ஸ்தாபனம்

ஹட்சன்ஸ்

631, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

A-21


பொறுமை, சகிப்புத்தன்மை, பெருந்தன்மை, வயிற்றெரிச்சல் போன்றவற்றுக்கு உதாரணம் வேண்டுமானல் ஆசிரியரையும், ஓய்வூதியம் பெறுவோரையும் எடுத்துக்கொள்ளலாம். யாழ்ப்பாணத்தில் ஆசிரியர் சம்பளமும், ஓய்வூதிய வவுச்சரும் வழங்கப்படும் 'லட்சணத்தை'ப் பார்த்தால் மேற்படி உணர்வுகள்தான் ஏற்படும்.

''ஓய்வூதியம் பெறும் நோயாளருக்கு யாழ். ஆஸ்பத்திரியில் முன்னுரிமை''—இது செய்தி. ஆனல் செயலகத்தில் வவுச்சர் வழங்குவதில் சுணக்கம். ஒவ்வொரு மாதமும் 15–ஆம் திகதிக்கு முன்னதாக, ஓய்வூதியம் பெறுவோர்க்கான கொடுப்பனவுகள் முடியவேண்டும் என்பது ஒழுங்கு. மற்றும்படி, மற்ற ஊழியர் சம்பளம் பெறுவதற்கு முன் ஓய்வூதியம் கொடுத்து முடியவேண்டும் என்பதுவும் ஓர் மரபாகும். ஆரோக்கியமான சூழ்நிலையில் வவுச்சர்களைத் தாமே எழுதித் தயாரித்து, ஓய்வூதியக் கிளை இலிகிதர்கள் வழங்கியுள்ளார்கள். அது அன்று. ஆனல் இன்று—இந்தப் பணியைக் கொழும்பில் கணணியைக் கொண்டு செய்கிறார்கள். இந்த வவுச்சர்களைத் தன் பொறுப்பில் கொழும்பிலிருந்து கொண்டு வந்த முன்னாள் அரசாங்க அதிபர் ஒருவர், ஸ்ரீ லங்கா இராணுவத்தினரிடம் மாட்டிக் கொண்டு மயிரிழையில் உயிர்தப்பிய காதையை, மற்றவர்கள் மறந்திருக்கலாம். ஓய்வூதியம் பெறுவோர் மறந்திருக்க முடியாது.

அரசாங்க ஊழியர் எந்த விதமான சூழ்நிலையில் இருந்தாலும் தன் கடமையில் கண்ணாயிருந்து கருமமாற்றினுல் தனக்கும் வெற்றி, மற்றவர்களுக்கும் நன்மை. அத்தியாவசியம் தவிர்ந்த வேறு அநாவசிய வேலைகளைப் பார்க்கும் சில இலிகிதர்கள் ஓய்வூதியம் பெறுவோரைப் புறக்கணிக்கிறார்களாம்.

யாழ்ப்பாணத்தில் ஓய்வூதியம் பெறும் பதினைந்தாயிரத்துக்கும் சற்று அதிகமானேரின் வயிற்றெரிச்சலுக்கான கதை ஒன்று, தெரிய வந்தது. அது இது தான்—

வவுச்சர்களைக் கையேற்க 'ஜாம்பவான்' ஒருவர் கொழும்புக்கு அனுப்பப்பட்டார். வவுச்சர் பொதி ஏற்றிய லொறியின் இலக்கத்தை இவர் குறிக்கவில்லையாம்! லொறியின் விபரமும் தெரியாது. செயலக அதிகாரிகள் நிலைகுலைந்து, வயர்லஸ் மூலம் கொழும்புடன் தொடர்பு கொண்டிருக்கிறார்கள். நடப்பு மாதத்துக்கான வவுச்சர் தாமதித்து 23 ஆம் திகதியே செயலகம் வந்து சேர்ந்தது. ''வவுச்சர் பொதி விமானத்தில் வந்தால் என்ன கெட்டா போய் விடும்?' என்று ஓய்வூதியம் பெறுவோர் கேட்கிறார்கள்.□

நக்கீரன்

# அர்ப்பணிப்பின்றித் தலைமை கிடைக்காது

மகாத்மா காந்தியின் அகிம்சை வழி போராட்ட முறைகளை இலங்கையில் முதன் முதலாக அறிமுகப்படுத்தியவர்கள் யாழ்ப்பாண இளைஞர் கொங்கிரஸினர். 1920களின்மத்தியிலிருந்து காந்திய அகிம்சை வழிப் போராட்ட முறைகள் இவர்கள் மத்தியில் வளரத் தொடங்கி பின்னர் 1930களின் மத்தியில் அது அஸ்தமனம் பெற்றது. 1931 ஆம் ஆண்டு அரசாங்க சபைக்கு நிகழ்ந்த முதலாவது பொதுத் தேர்தலை யாழ்ப்பாணத்திலுள்ள நான்கு தொகுதிகளில் பகிஷ்கரித்தமையே இவர்களது அகிம்சைவழிப் போராட்டத்தின் உச்சக் கட்டம். இந்தப் பகிஷ்கரிப்போடு இவர்களது அகிம்சைப் போராட்டத்தின் உச்சக் கட்டம் முடிவடைந்து விட்டது. காந்தி காட்டிய ஏனைய வழிகளை இவர்கள் பின்பற்றவில்லை. உயிரைத் தியாகிக்கின்ற அளவிற்கு இவர்களில் யாரும் தயாராய் இருக்கவில்லை.

தந்தை செல்வா தலைமையில் தமிழரசுக் கட்சி ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து மீண்டும் காந்தியவழி அகிம்சைப் போராட்டங்கள் 1950களின் மத்தியிற் தலையெடுக்கத் தொடங்கின. 1961 ஆம் ஆண்டு சத்தியாக் கிரகப் போராட்டத்தின் தோல்வியுடன் அந்த அகிம்சைப் போராட்ட அலையும் ஓய்ந்தது. இச்சத்தியாக்கிரகம் தான் தமிழரசுக் கட்சியால் நடாத்தப்பட்ட அகிம்சைப் போராட்டத்தின் உச்சக் கட்டமாகும். சட்டமறுப்பின் ஓர்

**சுதேசி**

அம்சமாக தமிழரசுக் கட்சி சொந்த முத்திரை தயாரித்து, தனியான தபாற் சேவையை நடாத்திய போது, அது அரசால் தடைசெய்யப் பட்டதைத் தொடர்ந்து அந்தச் சத்தியாக்கிரகப் போராட்டம் கைவிடப்பட்டது. பின்பு இப் போராட்டம் வேறு வழிகளில் முன்னெடுக்கப்படவில்லை. இதிலும் தமிழரசுக் கட்சியினர் உயிர்த் தியாகத்திற்குத் தயாராய் இருக்கவில்லை. அகிம்சைப் போராட்டம் தனக்குரிய உச்சக்கட்ட வடிவங்களை இதில் அடையவில்லை.

பின்பு 1972 ஆம் ஆண்டு முதலாவது குடியரசு அரசியற் திட்டத்தைத் தொடர்ந்து அகிம்சைப் போராட்டம் மீண்டும் அரும்பத் தொடங்கியது. தமிழர் கூட்டணி இத்தகைய போராட்டங்களுக்கு இக்கால கட்டத்திற் தலைமை தாங்கத் தொடங்கியது. ஆயினும் இக்கால அகிம்சைப் போராட்டம் பெரும் அலைகளாக உருவாகவில்லை. தமிழர் கூட்டணியும், பின்பு தமிழர் விடுதலைக் கூட்டணியும் எத்தகைய உயிர்த்தியாகங்களையும் அகிம்சைப் போராட்டத்தில் செய்யவில்லை.

ஆயுதப் போராட்டம் எழு முன்பு, அகிம்சைப் போராட்டத்தை அதன் முழு வடிவில் நாம் செய்து பார்க்கவில்லை. எத்தகைய உயிர்த்தியாகமுமற்ற அகிம்சைப் போராட்டத்தைச் செய்துவிட்டு, அத

(11ஆம் பக்கம் பார்க்க)

## மகாத்மா காந்தியும்

# பாகிஸ்தான் பிரிவினையும்



**யசோதா பத்மநாதன்**

இந்தியா சிறப்பான வைதீகப் பாரம்பரியத்தைக் கொண்டு விளங்குவதானது வரலாற்றுப் போக்கில் ஏனைய நாடுகளைவிட வித்தியாசமாக வளரவும் விளங்கவும் அடிப்படைக் காரணமாகும். இந்த வைதீக இறுக்கம் பல தனித்துவத்தை இந்தியத்திற்கு அளித்திருக்கிற அதேவேளை இந்தியப் பிரதேசப் பிரிவினைக்கும் – விரும்பியோ விரும்பாமலோ பிரிக்கப்படுவதற்கும் காரணமாக விளங்கியிருக்கிறது. அந்தப் பின்னணியில் தான் இந்தியப் பிரதேசத்தில் பாகிஸ்தான் பிரிவினையும் அதில் மகாத்மாவின் பாரம்பரியப் பற்றின் தாக்கத்தையும் காணமுடிகிறது.

உலகத்தின் தேசத்தலைவர்களுள் வித்தியாசமான — ஆத்மநேயத்தின் பிரதான குருவாகவைத்து எண்ணப்படுபவர் மகாத்மா காந்தி. இதில் எவருக்கும் வேறுபட்ட கருத்துகள் இருக்கமுடியாது. ஏனைய நாடுகளில் நியாயங்களை நிலைநாட்ட வன்முறையையே ஒரே பாதையாகத் தேர்ந்தெடுத்து வெற்றி கண்டிருக்கிற போது இவற்றிலிருந்து முற்றிலும் மாறுபட்டு அகிம்சை, சத்தியம், ஆத்மபலம் மூலம் இந்தியாவை பிரித்தானிய ஏகாதிபத்தியத்திலிருந்து விடுவித்தார். முள்ளை முள்ளால் எடுக்காமல் பூவால் எடுத்த மகான் அவர். அதனால்தான் அவர் அன்றும் இன்றும் என்றும் வரலாற்றில் பேசப்பட்டார். பேசப்படுகிறார். பேசப்படுவார்.

ஆனால், மகாத்மா காந்தியை விமர்சன ரீதியாக நோக்குகின்றபோது அவர் மிகத் தீவிரமான வைதீகப் பற்றுக்கொண்டிருந்தார். அவர் வைதீகக் குடும்பத்தில் பிறந்தமையும், வைதீக முறையில் வளர்க்கப்பட்டமையும் இதற்குக் காரணமாக இருக்கலாம். ஆனால், அதுவே ஒருவகையில் பாகிஸ்தான் பிரிவினைக்கும் காரணமாயிற்று. தன் வரையில் தீவிர வைதீக இந்துவாக அவர் இருந்தார். இந்தியாவை — இந்திய வரலாற்றை — அதில் வைதீகத்தின் வலிமையை — நன்றாகப் புரிந்துகொண்டிருந்த — அதில் பற்றுக்கொண்டிருந்த இந்து அவர். அதனால் எதிர்கால இந்தியாவையும் இணைக்கும் ஒரு பாலமாக அவர் இருக்க முயன்றார்.

வைதீகத்தின் பிரிக்க முடியாத தன்மையினை அவர் ஆழமாகப் புரிந்து கொண்டமையின் விளைவுதான் பிரித்தானிய ஆட்சியின் பலாபலன்களையும், இந்தியா சுரண்டப்படுவதன் தார்ப்பரியத்தையும் தையும் விளங்கிக் கொண்டமையாகும். எனவே, அவர் இதனைப்பற்றி ஆழமாகச் சிந்தார். இந்தியாவின் விடுதலைக்கான திட்டங்களை வைதிகக் கண்களால் கண்டார். அதனால்தான் விடுதலை ஆயுதமாக சத்தியம், அகிம்சை, உண்ணாவிரதம் போன்றவற்றைக் கையாண்டார். இவற்றின் மூலம் வெற்றியடைய முடியுமென ஆழமாக நம்பினர்.

எனவே, எதிர்கால இந்தியா பற்றிய அவரது எண்ணங்களும் வைதீக சமூக அமைப்பை ஆதாரமாகக்கொண்டிருந்தது. மீண்டும் ஒரு 'ராமராஜ்ஜியத்தை' யதார்த்தத்தில் காண்பது அவர் நோக்கமாக இருந்தது. எதிர்கால (விடுதலைக்குப் பின்பான) இந்தியா பற்றி அவர் கூறும்போது இந்தியாவில் தோன்றி வளர்ந்திருந்த வர்ணச்சிரம அமைப்பு முறையை மக்கள் தொழில்களால் பிளவுபடாமல் வாழ இயலும் என்பதற்கு எடுத்துக் காட்டாகக் கூறினார். இயல்பையொட்டி தொழில் பகுப்பு முறையமைந்திருந்த, பிறப்பால் வேற்றுமையையோ செய்தொழிலால் உயர்வு, தாழ்வோ இல்லாதிருந்த, ஒவ்வொருவரும் தமது கடமையைச் செய்த சமுதாய அமைப்பு முறையையே வர்ணச்சிரமம் என்ற பெயரால் குறிப்பிடுகிறார். காந்தி சுத்தமான வைதீகத்தை மீளமைக்க விரும்பியிருந்தார் என்பது இதிலிருந்து புலனாகின்றது. அவர் இதனை மேலான பொது நோக்கில் இந்தியத் தனித்துவத்திற்கு ஏற்ற ஒரு வழி முறையாக எண்ணியிருந்தார். இதனால் பிரார்த்தனைக் கூட்டங்கள், இராமநாப ஜெபங்கள் முதலியவற்றை கொங்கிரஸின் பிரிக்க முடியாத ஒரு பகுதியாக வைத்திருந்தார்.

இவை தீவிர மதப்பற்றுக் கொண்டிருக்கும் — அதற்காக எதையும் இழக்கத் தயாராக இருக்கும் — முரண்பாடான மத அனுஷ்டானங்களைக் கொண்டிருக்கும் முஸ்லிம்களுக்கு எதிரானதாக இருந்தது. காந்தி 'ராமராஜ்ஜி'யத்தை ஒரு பகுதியாகக் கருதியதால், முஸ்லிம் நடுத்தர வர்க்கம் சுதந்திரப் போராட்டப் பிரவாகத்திலிருந்து விலகுகின்றது. இது முஸ்லிம் நடுத்தரவர்க்கத்யையும், விவசாயிகளையும், நகர்ப்புற மக்களையும் சிந்தனை ரீதியாக ஆண்டு வந்தது.

1870 இன் பின் இந்நிலை வெளிப்படையாகத் தெரியத் தொடங்கியது. இந்துக்கள் முஸ்லிம்களைவிட அரசியலில் முன்னேறியமை, அரசியலில் கூடுதல் பிரதிநிதித்துவம்பற்றி பிரஸ்தாபிக்கத் தொடங்கியமை என்பன, அவர்களை 'இந்துக்கள், முஸ்லிம்கள் ஆகிய இருவரும் இரண்டு தேசத்தவர்கள் மட்டுமல்ல, இரண்டு வேறுபட்ட தேசத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களை ஒருபோதும் பொதுவான அரசியல் வாழ்வுக்கு இட்டுச் செல்ல முடியாது' என எண்ண வைத்தது. இதனைச் சேர். சையாத் பிரதிபலித்தார். அத்துடன் பிரதிநிதித்துவத்தில் இனவாரி பிரதிநிதித்துவம் வேறு இதற்குத் தீனி போட்டது. இதன் மூலம் 1937 ஆம் ஆண்டு சட்டசபைத் தெரிவில் முஸ்லிம் லீக் அமைப்பு W.A. ஜின்னாவின் தலைமையில், 485 முஸ்லிம் ஆசனங்களில் 110 ஆசனங்களைக் கைப்பற்றியது. அதன்பின் ஜின்னா வெளியிட்ட அறிக்கையில் கொங்கிரஸ் இந்துக்களைப் பெரும்பான்மையாகக் கொண்டதெனவும், அவர்கள் பிரித்தானிய ஆதிக்கத்தின் பின்பாக இந்து சாம்ராஜ்ஜியம் ஒன்றை மீள் அமைப்பதில் முனைந்துள்ளார்கள்என்றும்குறிப்பிட்டுள்ளார். அத்துடன் முஸ்லிம்கள் தனியான தேசத்திற்குரியவர்கள் என்றும், இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் தனியான கலாசாரம், பாரம்பரியம், பிரதேசம் உண்டு எனவும், அவர்களுக்குத் தனியான ஒரு தீர்வு வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், ஜின்னா, கூறும்போது "நான் இந்த கொங்கிரஸ் அமைப்பிற்கு முப்பத்தைந்து வருடமாகப் பாடுபட்டேன். என்னுடைய குறிக்கோள் இந்து முஸ்லிம் ஒற்றுமையையே. காந்தி அரசியலில் முன்னுக்கு வரும்வரை எனது எண்ணம் இவ்விதமாகவேயிருந்தது. அதன்பின் இந்து முஸ்லிம் ஒற்றுமை சாத்தியமில்லை என உணர்ந்தேன். நான் ஏமாற்றப்பட்டேன்" என, ஜின்னா கூறுகிறார். ஜின்னாவிடம் பேட்டிக்குப் போனால் 'இந்துக்களும் முஸ்லிம்களும் வேறு வேறு நாட்டினர். காந்தி இந்து ராஜ்ஜியம் வேண்டுமென்கிறார். எனவே, முஸ்லிம்களுக்கு பாகிஸ்தான் வேண்டும்' என்று கூறுவார் என, லூயிஃபிஷர் கூறுகிறார்.

இஸ்லாமியர்களுள் ஒருவரான றகமட் அலி என்பவர் பாகிஸ்தான் நாட்டை வரையறுத்தார். முஸ்லிம்கள் பெரும்பான்மையாகவே வாழும் பஞ்சாப் (Panjab), வடபுற எல்லை மாகாணங்கள் (Atghan provinces), காஷ்மீர்(Kashmir), சிந்து (Sind), பாலூச்சிஸ்தான் (Baluechistan) இணைக்கப்பட்டு முஸ்லிம்களுக்கு வழங்கப்பட வேண்டுமெனவும், அதன் பெயர் ஒவ்வொரு இடத்தின் ஆங்கிலப் பதத்தின் முதலெழுத்தையும், பாலூச்சிஸ்தானின் கடைசி மூன்று எழுத்துக்களையும் இணைத்ததாக, "PAKSTAN" என வழங்கப்பட வேண்டும் எனவும் இஸ்லாமியப் பிரதேசத்தை வரையறுத்தார்.

இவ்வாறான முஸ்லிம்களின் கோரிக்கைக்கு எதிராக, இந்து முஸ்லிம் ஒற்றுமையை வலியுறுத்தி காந்தி தீவிரமாகப் போராடினார். தன் இலட்சியக் கனவுகளில் அவர் எப்போதும் ஊக்கமும் பற்றும் வைத்திருந்தார். அவரது கனவுகள், தத்துவங்கள், கொள்கைகள், எல்லாவற்றுக்கும் புறவய எல்லைகள் உண்டு என்பதை அவர் எதிர்பார்க்காமல் போனார். 'இந்துராஜ்' என்ற ஒன்றினை மாற்றாமல் காந்தியால் மேற்கொள்ளப்பட்ட இந்து முஸ்லிம் ஒற்றுமை தோல்வியில் முடிந்தது. இதனால் அவருடைய 'இந்து ராஜ், கொள்கையே பாகிஸ்தான் பிரிய அடிப்படைக் காரணமாயிற்று.

புறத்தோற்றத்தில் அனைவருக்கும் அவர் தன் உயர்ந்த இலட்சியத்தை நிறைவேற்றி இறந்த மனிதராகத் தெரியலாம். ஆனால் உண்மையில் அவர் இறக்கும்போது ஒரு விரக்தியுற்ற — இலட்சியத்தில் ஏமாற்றமடைந்த — மனிதராகவே இறந்தார். □




# சிறுவர் உரிமைகள்

## — மலையகத்தில் ஒரு நோக்கு

ஒவ்வொரு நாட்டு சனத்தொகையமைப்பிலும், 'சிறுவர்கள்' மிக முதன்மைப் பங்கை வகிப்பது நாம் அறிந்ததே. சிறுவர்கள் குறித்து தனிநபர், குடும்பம், சமூகம், அரசாங்கம், சர்வதேசம் இவ்வனைத்து மட்டங்களிலுமே மிகக் கவனமெடுக்கப்பட்டு வருவது வியப்பானதொன்றல்ல. ஏனெனில் இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்கள். எதிர்கால சமுதாயத்தை தாங்கி நிற்கும் ஆணிவேர்கள். நாம் எதிர்பார்க்கின்ற ஒரு சமுதாயத்தை அமைக்கப் போகின்றவர்கள். எனவே தான் சிறுவர்கள் குறித்து மிக முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது.

சர்வதேச ரீதியாக சிறுவர்களின் பாதுகாப்புக்காக 'சிறுவர் உரிமைகள்' என்ற சாசனம் வார்க்கப்பட்டுள்ளது. இது இன, மத, நிற, பிரதேச, பால் வேறுபாடின்றி சகல சிறுவர்களுக்கும் பொதுவான உரிமைகளாகும். இந்த சிறுவர்களுக்கான உரிமைகள் இலங்கையிலும் நடைமுறையிலுள்ளது. அதாவது 20.11.1959 இல் ஐக்கிய நாடுகள் சபையினால் வெளியிடப்பட்ட சிறுவர் உரிமைகள் பிரகடனத்தை இலங்கையும் ஏற்றுக்கொண்டுள்ளது.

□ பி. சிவப்பிரகாசம் □

ஆனால், இலங்கையில் சிறுவர்கள் பலவித துன்பியல்களுக்கு உள்ளாக்கப்படுகின்றமைபற்றி அறியக்கூடியதாக இருக்கின்றது. அதுவும் குறிப்பாக தீவின் ஏனைய சமூகங்களுடன் ஒப்பிடுகையில் மலையக — தோட்டச் சிறுவர்களின் நிலைப்பாடு வருந்தத்தக்கதாக இருக்கின்றது தோட்டப்புறச் சிறுவர்கள் பல கஷ்டங்களுக்குள்ளாக்கப்படுவதுடன், அடிமைப்படுத்தப்பட்டும், கொடுமைகள் இழைக்கப்பட்டும், பசி, பிணி, பட்டினியால் வதைக்கப்பட்டும் வருகின்றனர். இலங்கையில் சமூக, பொருளாதார, அரசியல் ரீதியாக மலையகச் சிறுவர்கள் பாகுபடுத்தப் படுகின்றமையை அறியக்கூடியதாக இருக்கின்றது.

இவ்வாறான பாகுபாடுகள் சமூக ரீதியாக மலையக சிறுவர்களை உளவியல், உடல் ரீதியாகப் பாதித்து வருவதுடன்; மலையக மக்களின்; எதிர்கால சமூக வளர்ச்சியையும், அபிவிருத்தியையும் வெகுவாகப் பாதித்து வருகின்றது. 'சிறுவர்கள் இலவசமும் கட்டாயமுமாக கல்வி பெறவேண்டும்' என்று சர்வதேச சிறுவர் உரிமைப் பிரகடனம் குறிப்பிடுகின்றது. இலங்கையில் இவ்விடயம் கட்டாயப்படுத்தப்பட்டிருப்பினும் தோட்டப்புறச் சூழலில் தேசிய கல்வி வாய்ப்பைப் பெறும் சிறுவர்களின் தொகை மிகக் குறைவாகும். இச் சிறுவர்களில் ஏறக்குறைய 45%த்தினர் பாடசாலை செல்லாமல் எழுத்தறிவின்றி இருப்பது வருந்தத்தக்க விடயமாகும். தேசியரீதியாக வழங்கப்படும் கல்வி வாய்ப்புகளும் இவர்களைச் சென்றடைவதில்லை என்பது மட்டுமன்றி, இன்னும், தோட்டப் பாடசாலைகளில் பல மாட்டுக் கொட்டில்களைப்போல் காணப்படுகின்றமை வருந்தத்தக்கதாகும்.

'போதிய வயதை எய்தும் வரை சிறுவர்களை தொழிலில் ஈடுபடுத்தக் கூடாது. இவர்கள்எச்சந்தர்ப்பத்திலும் அவர்களது உடல்நலம், கல்வியைப் பாதிக்கும் அல்லது அவர்களது உடல், உள நலிலெண்ண வளர்ச்சிக்கு இடையூறாக இருக்கும் எந்தத் தொழிலில் ஈடுபடுத்தவோ அல்லது ஈடுபடுத்தப்படுவதை அனுமதிக்கவோ கூடாது' என்று ஐ.நா சிறுவர் உரிமைப் பிரகடனம் குறிப்பிடுகின்றது. ஆனால், இலங்கையில் பல பிரதேசங்களிலும் உள்ள தனவந்தர்களின் பங்களாக்களில், கடைகளில், ஹொட்டேல்களில் கராஜாகளில், தோட்டங்களில், நகர் சுத்திகரிப்பு வேலைகளில் தோட்டப்புறச் சிறுவர்கள் ஈடுபடுத்தப்படுகின்றமையை யாரும் மறுக்க முடியாதுள்ளது. பல பங்களாக்களில் சிறுவர்களைப் பராமரிக்கவும், சமைக்கவும், உடுதுணிகளைத் துவைக்கவும் மலையகச் சின்னஞ்சிறுசுகள் பயன்படுத்தப்படுவதுடன், பல கொடுமைகளுக்கும், சித்திரவதைகளுக்கும் உள்ளாக்கப்படுகின்றனர். இவ்வாறு பங்களாக்களில் வேலைக்கமர்த்தப்பட்ட பல சிறுவர்கள் பெற்றோர்களிடமிருந்து அந்நியப்படுத்தப்பட்டும், காணுமலடிக்கப்பட்டும் இருக்கின்றனர். முதலாளித்துவ பொருளாதாரச் சுரண்டல் வடிவத்தின் ஒரு வடிவமாக இந்தச் சிறுவர்களின் உழைப்புச் சுரண்டல் காணப்படுகின்றது.



'சிறுவர்கள் சமுதாயப் பாதுகாப்பின் நன்மைகளை அடைய உரித்துடையவராவர். இவர்கள் யாவரும் போதுமான சத்துணவு,உறைவிடம், வைத்திய வசதிகள், பொழுது போக்கு வசதிகள் ஆகியவற்றிற்கு உரித்துடையவராவர்' என்று சிறுவர் உரிமைப் பிரகடனம் குறிப்பிடுகின்ற போதும்; இந்தப் பிரகடனத்தின் சரத்துக்கள் எந்தளவிற்கு மலையகத்திலே நடைமுறையிலுள்ளது? என்பது கேள்விக்குறியே! சத்துணவோ, நிறையுணவோ இன்றி போஷாக்கின்மையால் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பது, பெருந்தோட்டச் சிறுவர்களேயாகும். மலையகத்தவர்கள் பெரும்பான்மையாக வாழும் நுவரெலியா மாவட்டத்தில் தீவிலே உயர்ந்த போஷாக்கின்மை வீதமான 65%ஐக் காணக் கூடியதாக இருக்கின்றது. எத்தியோப்பியச்சிறுவர்களை ஒத்தசிறுவர்கள் இங்கே இன்னும் வாழ்கிறார்கள் என்பது வெட்கித்தலை குனிய வேண்டிய விடயமாகும். 1850களில் கட்டப்பட்ட மாட்டுத் தொழுவத்தையொத்த அதே 'லயத்தில்' தொடர்ந்து இந்தச் சிறுவர்கள் வாழவேண்டியுள்ளமையால், அவர்கள் உடலியல், உளவியல் ரீதியாகப் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். தீவிலே உயர்ந்த சிசுமரணவீதம் பெருந்தோட்டங்களிலே காணப்படுகின்றது என்பது, தேசியரீதியான சுகாதார வசதிகள் இவர்களை அண்மிக்கவில்லை என்பதைப் புலப்படுத்துகின்றது. பெரும் பொழுது போக்கு வசதிகள் தோட்டப் புறங்களிலே காணப்படாமையால், இச்சிறுவர்கள் உளவியல், உடலியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டு வருவதுடன் பல தீய செயல்களிலும் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

பெருந்தோட்டச் சிறுவர்களில், பெரும்பாலானவர்கள் தமது பெற்றோர்களாலேயே வேலைகளில் ஈடுபடுத்தப்படுகின்றமை வருந்தத்தக்க விடயமாகும். வீட்டுவேலைகளைச்செய்தல், சமைத்தல், விறகு தேடுதல், சிறு பிள்ளைகளைப் பராமரித்தல், வேலைத்தளங்களுக்கு உணவு வகைகளைக் கொண்டு செல்லல், கடைக்குச் செல்லல் இவ்வாறாக பல வேலைகளை சின்னஞ் சிறுசுகள் செய்யப் பணிக்கப்படுகின்றனர். சாதாரணமாக பெண்பிள்ளைகளே இவ்வாறான வேலைகளில் பெரும்பங்கைச்செய்கின்றனர். பூப்பெய்திய ஒரு பெண்பிள்ளை 'பெரியபிள்ளை' என்றப் போர்வையில் 8-12 மணித்தியால வேலை வாங்கப்படுகின்றாள். ஆனால் இலங்கையில் சிறுவர்கள் குறித்த சட்டமானது 'எவரும் ஒரு சிறுவனை பாடசாலைக்குச் செல்வதைத் தடுக்கும் முகமாக வேலையிலீடுபடுத்தக் கூடாது என்று குறிப்பிடுகின்றது.

எவ்வாறெனினும் இச்சட்டங்களுக்குப் புறம்பாக, சிறுவர் உரிமைகள் மீறப்படுவது, இச்சட்டங்களின் பலவீனத்தையே காட்டுகின்றது. ஆனால், உண்மையில் தோட்டப்புறச் சிறுவர்கள் இவ்வாறு உழைப்பிலீடுபடுத்தப்படுவது, அவர்களின் வருமானத்தை வீட்டுத் துறைக்குச் செலவிடவேயாகும். அதாவது தேசியரீதியாக குறைந்த வருமானத்தைப் பெறும் பெருந்தோட்டத்துறை மக்கள் உயிர்வாழ்வதற்காவது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டியுள்ளது. இந்த நிலைப்பாட்டுக்கு மத்தியிலேயே சிறுவர்கள் வேலைகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர். அதாவது இந்தச் சமூக அமைப்பு இவ்வாறான மனித நடவடிக்கைகளையே தோற்றுவிக்கும் என்பதை நாம் மறந்துவிடமுடியாது.

மலையகத் தோட்டச் சிருர்களின் இவ்வாறான குறைபாடுகளை நிவிர்த்தி செய்யவே 'யுனிசெப்' நிறுவனம் பல்வேறு சிறுவர் நலன் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது. இதில் குறிப்பிடத்தக்க ஒன்றுதான் சிறுவர் பராமரிப்பு நிலையம் ஆகும். அதேபோல் தோட்டப்புறச் சிறுவர்களின் கல்வித் தராதரத்தை உயர்த்தும் முகமாக 'சீடா' செயல்திட்டம் செயல்பட்டு வருகின்றது. தேசிய, சர்வதேச அபிவிருத்தியைக் கருத்திற் கொண்டு மேற்குறிப்பிட்ட நிறுவனங்கள் செயற்பட்ட போதும், இவற்றின் உள்ளார்ந்த வெளியார்ந்த குறைபாடுகளும், பலவீனங்களும் இவற்றின் பெறுபேறுகளில் சில பாதகமான விளைவுகளை வெளிக் கொண்டு வந்திருக்கின்றன. தொடர்ந்து நீண்டகாலத்தில் மலையகச் சிறுவர்கள் தேசிய நீரோட்டத்தில் கலந்து சமூகத்தை மேல் நோக்கி உந்தச் செய்யப் போகின்றனரா என்பது கேள்விக்குறியே!

மழையை, பனியை, குளிரை வெயிலை, வறுமையை சகலத்தையுமே பொறுத்துக்கொண்டு இந்த நாட்டின் பொருளாதாரத்திற்கு வளம் சேர்த்து வரும் தோட்டத் தொழிலாளரின் எதிர்காலம் இருண்டதாக இருக்கின்ற இவ்வேளையில், எதிர்காலத்தில் அந்த ஸ்தானத்தில் தலைமை தாங்கி நிற்கப் போகின்ற மலையகச் சிறுவர்களின் இன்றையநிலைப்பாடு தெளிவில்லாமல் இருப்பது குறித்து சமூக பிரக்ஞையுள்ள சகல மனிதர்களும் உணர்ந்து, செயல்பட வேண்டியுள்ளது.

ஆகவே இச்சிறுவர்கள் குறித்து மாத்திரமல்ல – பொதுவாக மலையக மக்கள் குறித்தும் சரியானதும், தெளிவானதுமான பாதையை முன் வைக்க வேண்டியுள்ளது. இந்த அடக்குமுறைச் சமூக அமைப்பில் நின்று சிந்தித்துச் செயற்படுவது நிரந்தரத்தீர்வாகாது. அதற்கு, சரியான மாற்றுத் திட்டம் முன்வைக்கப்படுவது அவசியமும் அவசரமானதாகும். □

---

## சிந்தனைமேடை – 2

### புலம்பெயரும் ஈழத்தமிழர்

இலங்கையின் வடக்கு—கிழக்குப் பகுதிகளிலிருந்து இன்று பெருவாரியான தமிழ் மக்கள்—குறிப்பாக இளைஞர்கள், யுவதிகள்—பிறநாடுகளுக்குச் செல்கின்றனர். இவர்கள் இப்படி பெருவாரியாக இடம்பெயர்வதற்குக் காரணமாகக் காட்டப்படுவது, இங்கு தீர்க்கப்படாதிருக்கும் இனப்பிரச்சினையு, அதனையொட்டித் தொடர்ந்து நிகழும் வன்செயல்களுமே.

இப்படி இவர்கள் புலம் பெயர்ந்து செல்வதால் நமக்கும் நமது நாட்டுக்கும் ஏற்படும் சாதக பாதகமான விளைவுகள் யாவை?

- □ இது நமது பொருளாதாரத்தை எவ்வாறு பாதிக்கிறது, அல்லது எவ்வாறு போசிக்கிறது?
- □ அரசியல் ரீதியாக இது ஏற்படுத்தும் தாக்கம்.
- □ இதை மூளைசாலிகளின் வெளியேற்றம் எனக் கொள்ளலாமா அல்லது நமது இளம் சந்ததியினரின் மூளை விசாலிப்படைகிறது எனச் சொல்லலாமா?
- □ கலாசாரச் சீரழிவா அல்லது புதிய பூரண கலாசாரத்தின் திறவுகோலா?
- □ அறிவியல் ரீதியான பயன்பாடு?
- □ ஆரோக்கியம் பேணப்படுமா? அல்ல புதுப்புதுது அந்நிய நோய்கள் பரப்பப்படுமா?

இவைபோன்றவற்றை மையமாகக்கொண்டு சிந்தனைமேடை—2இன் விவாத அரங்கில் பங்குபற்றுமாறு வாசகர்கள் வேண்டப்படுகின்றனர்.

விடயங்கள் தனித்தாளில் 3 பக்கங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். தாளின் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுதப்பட வேணடும்.

— ஆசிரியர் □

## அறிவியல் உலகம்

யாழ்ப்பாணக் கல்வித் திணைக்களம், யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் ஆகியவற்றின் அனுசரணையுடன் தொண்டைமானாறு வெளிக்கள நிலையம், யாழ் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் அமைக்கும் யாழ். பிரதேசப் பாடசாலைத் தாவரவியற் பூங்காத் திறப்பு விழாவில் கலாநிதி கே. தெய்வேந்திரராசா நிகழ்த்திய சிறப்புப் பேருரை

# செய்ம்முறை விஞ்ஞானக் கல்வி வளர்ச்சிக்கு அவசியம்

தொகுப்பு:
**மயிலங்கூடலூர் பி. நடராசன்**

உலகிலுள்ள அநேகமான நாடுகளின் பெரிய நகரங்களில் அழகான பூங்காக்கள் அமைந்திருப்பதைக் காணலாம். இயற்கைக்குப் புறம்பான சூழலில் பெரிய மாடிக் கட்டிடங்களிலும் தொழிற்சாலைகளிலும் அதிக நேரத்தைப் போக்கி வருவோர், இயற்கையை இரசிப்பதற்கு அதன் அழகை நயப்பதனால் மன ஆறுதல் அடைவதற்கும் பூங்காக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இப்பூங்காக்களை மிகவும் கவனத்துடன் பராமரித்து வருகின்றனர். இப்பூங்காக்கள் தாம் அமைந்துள்ள நகரங்களுக்குத் தனிச் சிறப்பை ஏற்படுத்துகின்றன.

சில பூங்காக்கள் அழகான பூமரங்களை மட்டும் கொண்டிராது, பல்வேறு வகைப்பட்ட தாவரங்களை வளர்த்துப் பேணி அவற்றைத் தொகுத்து வைக்கும் மையமாகவும் விளங்குகின்றன. இவை போன்று எமது நாட்டிற் பேராதனையிலுள்ள தேசிய தாவரவியற் பூங்கா அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இப்படியான தாவரவியற் பூங்காக்கள் பல நாடுகளிலும் உள்ளன. இங்கிலாந்திலுள்ள கியூ பூங்கா நிர்வாகிகள், அப்பூங்காவில் தமது பிரதேசத்துக்குரிய தாவரங்களை மட்டும் அல்லாது, ஏனைய நாடுகளில் உள்ள (அயனமண்டலப் பகுதி வாழ்) தாவரங்களைக் கூட உரிய முறையில் வளர்த்துப் பேணிப் பாதுகாத்துப் பார்வைக்கு வைத்துள்ளனர். கியூ பூங்காவைப் பார்ப்பதற்கு அந்நாட்டவர் மட்டுமன்றிப் பிறநாட்டவர்களும் வருடாவருடம் வருகின்றனர்.

இவ்வாறான அழகிய பூங்காக்கள் எமது பகுதியிலும் ?தான்றவேண்டும். இன்று யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தினர் அமைக்கும் பிரதேச பாடசாலைத் தாவரவியற் பூங்கா பெரிய விசாலமான பூங்கா ஒன்று தோன்றுவதற்கு ஊக்கியாகவும் முன்னோடியாகவும் அமையவேண்டும்.

எமது ஆக்கங்கள் திறப்பு விழாக்களுடனே கருத்தரங்குகளுடனே முடிந்துவிடக் கூடாது. அவை தொடர்ந்தும் செயற்படவேண்டும்; சிறப்பாகவிருத்தி படையவேண்டும். சிறிய முயற்சியாக இருப்பினும் அது திறமையாக நிர்மாணிக்கப்பட்டு, நிர்வகிக்கப்பட்டு, விருத்தி செய்யப்படுமேயானால் அது மாணவர்க்கு மட்டுமல்லாது இயற்கையில் நாட்டமுடைய நாகரிகமான மனிதருக்கும் சிந்தனையாளருக்கும், பயனுள்ளதாக அமையும்.

கடந்த பத்து ஆண்டுகளாகப் பாடசாலைகளில், விஞ்ஞானக் கல்வியிற் செய்ம்முறைக்குரிய முக்கியத்துவம் படிப்படியாகக் குறைந்து வருவதைக் காணக் கூடியதாக இருக்கின்றது. சில பாடசாலைகளில் விஞ்ஞானச் செய்ம்முறை முற்றாகக் கைவிடப்பட்ட நிலையில் இருப்பதை காணலாம். செய்ம்முறை, பரிசோதனை முறைகள் இல்லாத, இயற்கையிலுள்ள உயிர் அங்கிகளையும் அவற்றின் செயற்பாடுகளையும் அவதானிககாத, அவதானித்தும் விளங்க முடியாத ஒரு நிலையிலே பயிலும் விஞ்ஞானம் நாட்டின் வளர்ச்சிக்கு எவ்வகையிலும் பொருந்தாது. இது வெற்றிடத்தில் நிசமும் பயனற்ற விஞ்ஞானக் கல்வியாக அமைகிறது.

துவிச்சக்கர வண்டியைப் பற்றிப் பல்வேறு வகையில் பக்கம் பக்கமாக விளக்கங்களை அளித்து, அதன் தொழிற்பாடுகளை விவரித்துக் கூறும்போது பெறுவதைவிட அதனை நேரடியாகப் பார்த்து, தொழிற்படுத்தும் ஒருவர் பெறும் அறிவு முழுமையாக அமையும். நூல்களில் பூவின் அமைப்புக்களைப் பற்றியும் அவற்றின் தொழிற்பாடுகளைப் பற்றியும் கருக்கட்டல் போன்ற செயல் முறைகளைப் பற்றியும் விரிவாகப்பயிலும் மாணவர்கள், நேரடியாகப் பூவையோ அதன் பழத்தையோ வித்துக்களையோ அறியாத நிலையில் உள்ளதை நாம் காணலாம். சவ்வரிசி பற்றி வினவும் போது அது வித்து அல்லது அரிசி என்று விடை கூறும் மாணவர்களும் உள்ளனர். மாணவர் இதனை கூர்ந்து அவதானிக்காததும் உரிய முறையில் ஆராயாததுமே இதற்குக் காரணமாகும். இந்த நிலையில் எமது மாணவரிடம் புதியவற்றை உருவாக்கும் ஆற்றலோ, சிந்தனையோ ஏற்படமாட்டாது.

மின்னைப் பற்றி மாணவர்கள் வகுப்பில் எவ்வளவோ விடயங்களைப் படிக்கிறார்கள். ஆனால், வீட்டில், மின்சுற்றிலுள்ள உருகி (Fuse) செயலிழந்து, மின் துண்டிக்கப்பட்டால் என்ன செய்யவேண்டும என்பதை அறியாமல் உள்ளனர். இவ்வாறான சமூகத்தை உருவாக்கும் இன்றைய ?க் கல்வியால் என்ன பயன்? இந்த இலகுவான செயல்களைக்கூட இவர்களால் ஏன் செய்ய முடியாது போயிற்று? அவர்களுடைய நுண்ணறிவு (விவேகம்) குறைவானதா? இல்லை. ஏட்டுப் படிப்புடன் இணைபிரியாததாகிய செயன்முறைக் கற்றல் இடம் பெறாததே. இதற்கு அடிப்படைக் காரணமாகும்.

செய்ம்முறைப் பயிற்சியினால்தான் கையாளும் திறன் (Manipulating skill) ஏற்படுகிறது. விஞ்ஞானிகள் யாவரும் நூல்களை மட்டும் கற்பதோடு நின்றிருந்தால், ஆய்வு கூட்டத்தில் பரிசோதனைகளை செய்து அல்லது இயற்கை நிகழ்ச்சிகளை உன்னிப்பாக அவதானித்து, ஆராயாது இருந்திருந்தால், இன்று நாம் புராதன கால மனிதராகவே இருந்திருப்போம்.

செயல் முறைக் கல்விக்கு ஏற்ற இடமாகத் தாவரவியற் பூங்கா அமைந்துள்ளது. மாணவர்கள் தாவரவியற் பூங்காவுக்குச் சென்று தமது அறிவையும் திறன்களையும் வளர்த்துக் கொள்ளவேண்டும். தாவரவியற் பூங்காவில் மாணவர்கள் கற்கும் பாடப்பரப்புக்குரிய தாவரங்களையும் தாவரவியல் ரீதியில் சிறப்பியல்புகளைக் கொண்ட தாவரங்களையும் வளர்ப்பதன் மூலம் மாணவர்களின் தேவையை நிறைவேற்றலாம் அதனோடு பூங்காவோடு இணைந்த சிறு ஆய்வு கூடமும் நிறுவப்பட வேண்டும். இங்கு நுணுக்குக் காட்டிகள், வழுக்கிகள், சாயங்கள் போன்ற தேவையான பொருள்கள் இருக்க வேண்டும். இங்கு பரிசோதனைகளையும் நுண் அவதானங்களையும் மேற்கொள்வதால், நேரடி அவதானத்தால் பெறும் கற்றல் அநுபவங்களை அதிகரிக்கலாம். மேலும் மாணவர்க்கு வழிகாட்டும் உறுதுணையாக, பாடப்பரப்பைக் கற்றுத் தேர்ந்தவரும் செய்முறைகளில் அநுபவம் வாய்ந்தவருமான ஆசிரியர்களும் அவசியமாவர். பூங்கா ஆய்வு கூடத்தில், பூங்காப் பிரதேசத்தில் வளராத தாவரங்களின் மாதிரிக் காப்பேடுகளும் ('Herberium Sheets) உருவாக்கப்படுதல் நன்று.

கைதடியில் உள்ள சித்த மருத்துவத் துறையினரும் சித்த மருத்துவத்தில் பயன்படும் மூலிகைகளைக் கொண்ட தாவரவியற் பூங்காவை நிறுவ முயன்று வருவதையும், இங்கு நினைவு கூர்தல் பொருத்தமாகும்.

இன்று திறந்துவைக்கப்படும் பிரதேசப் பாடசாலைத் தாவரவியற் பூங்கா சிறப்பாக இயங்க யாழ். பல்கலைக்கழகத் தாவரவியற்றுறையினரின் உதவி, எப்பொழுதும் எல்லா வகைகளிலும் கிடைக்குமென, உறுதி கூறுகிறேன்.

யாழ். பிரதேசப் பாடசாலைத் தாவரவியற் பூங்கா முழுமை பெற்று தாவரவியற் செய்முறையை உரிய முறையில் கற்கவும் கற்பிக்கவும் ஊக்கம் அளிக்கும் வகையிற் செயற்பட வேண்டும். □

# அணுவிலிருந்து உருவாகும் சக்தியின் சிகரம்!

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பே அணுவிலிருந்து சக்தியைப் பெற்றுக் கொள்வதற்கான ஆராய்ச்சிகள் ஆரம்பிக்கப்பட்டு விட்டன. எனினும் அணுவிலிருந்து பெறப்படும் கூட்டுக்கலவையில் மாபெரும் சக்தியினைப் பெறமுடியுமென்று, விஞ்ஞானிகள் கருத்து வெளியிடுகின்றனர்.

இப்போது மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சிகளில், அணுவிலிருந்து 50 மில்லியன் சதம வெப்பநிலையைப் பெறுவதும் ஒன்றாக விளங்குகிறது. கூடிய அளவிலான மின் சக்தியைப் பெறுவது குறித்தும், ஆராய்ச்சி மேற்கொள்ளப்படுகின்றது.

ஜேர்மனியிலே மக்ஸ் பிளாங் ஆராய்ச்சியினை (Max Plank research) மேற்கொள்ளும பௌதீகவியல் கூட்டுத்தாபனம் ஆனது, மேற்கூறப்பட்ட ஆராய்ச்சியின் கோட்டையாக விளங்குவதுடன், 1?5 ஆம் ஆண்டில் தனது வெள்ளிவிழாவினை மேற்கொண்டது. இந்த ஆராய்ச்சியினை மேற்கொள்ளும் விஞ்ஞானிகளே, வருங் காலத்தில் அணுவிலிருந்து கூடிய அளவு வெப்பம் பெறுவதில் உண்டாகும் இடையூறுகளைத் தீர்க்க முடியும் என்று நம்பச் செய்வதில், வெற்றி அடைந்துள்ளனர்.

ஐதரசன் குண்டிலிருந்து சக்தியினைப் பெற்றுக் கொள்வதற்கு இரண்டு குண்டுகளை ஒன்றாகப் பற்ற வைக்க வேண்டும். ஆனல் இந்த இரண்டு குண்டுகளையும் அருகருகே கொண்டு வருவது மிகவும் கடினமானது அவற்றின் ஒத்த ஏற்றங்களே இதற்குக் காரணம். இக்குண்டுகளுக்கு உயர் வெப்பததை (1000சதம வெப்பநிலை) வழங்குவதன் மூலமே இவை பற்றவைக்கப்படுகின்றன

□ ச. ஜெயக்குமார்

செய்யப்படும் ஆராய்ச்சிகள் மேலும் வெற்றி அடையுமாயின், அணுவிலிருந்தான சக்தி உற்பத்தியின் அளவு பலமடங்காகி, பலபயன்களைப் பெறலாம். இதனைக் கருதியே விஞ்ஞானிகள் "அணுவானது சக்தியின் திறவுகோலாக அமைகின்றது" என கருத்து வெளியிடுகின்றனர். □

## 79 வயதில் நோபல் பரிசு

நோபல் பரிசுகள் சிறந்த செய்கைகளுக்காகவும் புதிய கண்டு பிடிப்புகளுக்காகவும் ஆண்டுதோறும் வழங்கப்படும் ஓர் உயர்ந்த விருது. 1986 ஆம் ஆண்டு மேற்கு ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த ஈன்ஸ்ற் ருஸ்கோ, பௌதீகவியலில் நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானிகளில் ஒருவராவார். அவர் தனது 79 ஆவது வயதிலே இப்பரிசைப் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. இத்தகைய முதிய வயதுவரை ஆராய்ச்சியில் ஈடுபட்டமை மேற்குலக நாட்டு மக்களின் அயராத உழைப்பு, அறிவியல் ஆர்வம் என்பவற்றைக் காட்டுகின்றது. கடந்த 50 வருட காலமாக மேற்கொள்ளப்பட்டு வரும் இலத்திரனியல் தொலைகாட்டியின ஆய்விற்காகவே, இவருக்கும் வேறு இருவருக்கும் இப்பரிசு வழங்கப்பட்டது.

50 வருடங்களுக்கு முன்பே ஈன்ஸ்ற் ருஸ்கோ 1 ஆவது இலத்திரனியல் தொலைகாட்டியினைக் கண்டுபிடித்தார். "ருஸ்கோ நோபல் பரிசு பெறுவார்" என்று அடிக்கடி சொல்லப்பட்ட போதிலும், இந்நிகழ்வு அவரது 79 ஆவது வயதிலேயே நிகழ்ந்தது.

1937 ஆம் ஆண்டிலேயே ருஸ்கோவும் அவரது குழுவும் சேர்ந்து மேற்கொண்ட முயற்சியின் பலனாக, முதலாவது தொடர் இலத்திரனியல் தொலைகாட்டி உருவாக்கப்பட்டது. இத்தொலைகாட்டிகள் உடனடியாகவே உலகம் பூராகவும் பயன்படுத்தப்பட்டன.

மேற்கூறப்பட்ட ருஸ்கோவைப்போல வளர்முக நாட்டு மக்கள் யாவரும் செயற்படின், அந்நாடுகள் துரித வளர்ச்சி அடையும். □

# பரதநாட்டியக் கச்சேரி அமைப்பு முறை - இதில் மாற்றம் அவசியமா?

□ திருமதி பத்மரஞ்சனி உமாசங்கர் □

ஒரு பரத நாட்டியக் கச்சேரியின் உருப்படிகள் எவை என்பதையும், அவை எவ்வொழுங்கில் இருக்க வேண்டும் என்பதையும் "தஞ்சை நால்வர்" என அழைக்கப்படுகின்ற சின்னையா, பொன்னையா, வடிவேலு, சிவானந்தம் — சகோதரர்கள் வடிவமைத்துத் தந்துள்ளனர். ஏறக்குறைய இரு நூற்றாண்டுகளாக இது வழுவாமல் பின்பற்றப்பட்டு வருகின்றது. இது ஒரு பொது விதியாகக் கொள்ளப்பட்டு, அம் முறையிலேயே பரதநாட்டியக் கச்சேரியானது உருவாக்கப்படுகின்றது.

இதன்படி அலாரிப்பு, ஜதீஸ்வரம், சப்தம், வர்ணம், பதம், தில்லானா, சுலோகம் ஆகிய உருப்படிகளைக் கொண்டமைந்ததே ஒரு பரதநாட்டியக் கச்சேரியாகக் கொள்ளப்படுகின்றது.

ஒரு பரதநாட்டியக் கச்சேரியைக் கண்ணுறுகின்ற சபையோர் யாவருக்கும், இவ்வுருப்படிகள் பற்றிய அறிவு பூரணமாக இருக்கும் என எதிர்பார்க்கமுடியாது. எனவே அது பற்றி சிறு விளக்கம்.

## நிருத்தம், நிருத்தியம்

ஒவ்வோருருப்படியாக ஆராயுமுன், பரசநாட்டியத்தின் இரு பிரிவுகளான நிருத்தம், நிருத்தியம் பற்றிச் சில வரிகள் கூறுவது பொருத்தம் உடையது.

அபிநயம் எதுவுமின்றிய சுத்தமான ஆடலை மட்டும் கொண்டது நிருத்தம்; ஆடல், அபிநயம் இரண்டினையும் உள்ளடக்கியது நிருத்தியம்.

## அலாரிப்பு

இறைவனுக்கும், அரங்குக்கும், சபையோர்க்கும், நடன முறைப்படி, நர்த்தகி கள் வணக்கங்களைச் செலுத்துவதாக அமைகின்ற அலாரிப்பு — ராகமின்றி குறித்த தாளத் திற்கமைய மிருதங்க ஜதிச் சொற்கட்டுகளுக்கு ஏற்றவாறு ஆடப்படுகின்றது. இது சுத்த நிருத்த வகையைச் சார்ந்ததாகையால், இங்கு அபிநயமின்றிய ஆடல் மட்டுமே காணப்படும்.

## ஜதீஸ்வரம்

பெயருக்கேற்றவாறு, ஜதிகளையும், ஸ்வரக் கோர்வைகளையும் உள்ளடக்கியதாக அமையும் இவ்வுருப்படியும் சுத்த நிருத்த வகையைச் சார்ந்ததே. இங்கு ராகம் சேர்க்கப்பட்டு, லயத்துடன், அபிநயமின்றிய ஆடல் பரிமளிக்கின்றது.

## சப்தம்

சப்தத்திலேயே ஆடலுடன், அபிநயம் தலையெடுக்கின்றது. அத்துடன் இங்கேயே ஜதிச் சொற்களுடன், அபிநயத்துக்கான பாட்டின் சாகித்யச் சொற்களும் சேர்க்கப்படுகின்றன.

## வர்ணம்

ஒரு சங்கீதக் கச்சேரியில், ராகம், தாளம் பல்லவிக்குரிய முக்கியத்துவம் பரதநாட்டியக் கச்சேரியில் வர்ணத்துக்கே அளிக்கப்படுகின்றது. மிகச் சிக்கலானதும், கடுமையானதுமான இவ்வுருப்படியில் ஆடல், அபிநயம் இரண்டுக்கும் சம அளவு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. எனவே நிருத்திய வகையில் முக்கியமானது இவ்வுருப்படி.

## பதம்

அபிநயம் — முழு அளவினதாக, முழு மலர்ச்சியுடன் அமையும் பதத்தில், ஆடல் இலேசானதாக அமைந்திருக்கும். உணர்ச்சியின் பல நிலைகளை, சிறப்பாக, காதல் (சிருங்கார) நிலைகளைச் சித்திரித்து, அவற்றை அபிநயித்துக் காட்டுவதாக இது அமைந்திருக்கும்.

## தில்லானா

பதத்தின் பின் இடம்பெறுவது, கச்சேரிக்கு மீண்டும் விறுவிறுப்பினை அளிக்கும் தில்லானா, தற்போது இது பொதுவாக, இறுதி நிகழ்ச்சியாக அமைகிறது. மிகச் சிறிதளவு அபிநயமே காணப்படுவதால், நிருத்தவகையைச் சார்ந்ததாகக் கொள்ளப்படும் தில்லானாவில், லயமும், ஆடலும், அவற்றின் அழகும் தனித்தனியே வெளிப்படுத்தப் படுகின்றன.

முற்காலத்தில் தில்லானாவின் பின் சுலோகம் இடம் பெறுவது வழக்கமாக இருந்து வந்துள்ளது.

## "இடை சொருகல்"

இதுவே முறையாகவிருந்த போதிலும், தற்போது, கீர்த்தனை, ஜெயதேவரின் — அஷ்டபதி, ஜாவளி போன்றவை பத உருப்படியையடுத்தும், கவுத்துவம் — ஜதீஸ்வரத்தையடுத்தும் சேர்க்கப்பட்டு வந்துள்ளன; வருகின்றன.

இது தவிர, சிலர் — மயில் நடனம், குறத்தி நடனம், பாம்பு நடனம் முதலியவற்றையும், கச்சேரியைச் சோபிக்க வைப்பதற்காகச் சேர்த்துக் கொள்வதுமுண்டு. இது ஒரு முறையான பரத நாட்டியக் கச்சேரி அமைப்பு முறைக்கு ஒத்ததா என்பது கேள்விக் குறியே!

நெடுக — அலாரிப்பும், ஜதீஸ்வரமும், வர்ணமும்தானா? இவ்வமைப்பு முறையில் முழுவதான மாற்றமொன்று அவசியம் என்ற கருத்து தற்போது சிலரால் முன்வைக்கப்படுகின்றது. கட்டுக்கோப்பான இவ்வமைப்பு முறையான "உயிர்" வேலிக்குப் பதிலாக 'மதில்" அமைந்தாலென்ன என்பது போல இதைக் கருதலாம். ஆனால் மதில் அமைத்தால் வேலியுடன் "உயிரும்" போய் விடுமே! தவிரவும் பழமையில் ஊறியவர்கள் என்பதற்காக, பெற்றோரை நடுவீதியில் தூக்கியெறிய முடியுமாஎன்ன?

ஆயினும்கூட, புதுமை விரும்பிகள் பழைய அமைப்பு முறையை முற்றாக மாற்றாமல், "இடை சொருகல்" ஆக, (பழைய கதியால்கட்கிடையில் புதிது நடுவதில்லையா?) சில உருப்படிகளைச் சேர்க்கலாம் என்பது என் பணிவான கருத்து.

உதாரணமாக, நாயன்மார்களின் தேவாரம், திருவாசகங்கள், ஆழ்வார்களின் பாசுரங்கள், அருணகிரிநாதரின் — சந்தங்கள் நிரம்பிய திருப்புகழ் — இடைபுகுத்தப்படலாம்.

## "நாட்டிய நாடகம்"

ஆயினும் இம்மரபு வழிவந்த அமைப்பு அங்ஙனமே அழியாது இருக்க, அதையும் ஒரு புறம் பேணிக்கொண்டு, புதுமைகள், மாற்றங்கள் புகுத்தி பரத நாட்டியத்தைச் செழிப்புறச்செய்ய வழி இல்லாமலில்லை. அவ்வழி — "நாட்டிய நாடகம்" ஆகும். "நாட்டிய நாடகம்" என்பது பெயருக்கேற்றாற்போல் நாட்டியம் (ஆடல்), நாடகம் இரண்டுமிணைந்துருவாவது. "நாட்டிய நாடகம்" இன்னின்ன வரையறைகட்குட்பட்டுத்தான் இருக்கவேண்டுமென்ற நியதிகளை மிகக் குறைவாகவே கொண்டுள்ளது.

எனவே மாற்றம், புதுமைகள் செய்யவிரும்புவோர் "நாட்டிய நாடகத்தை" நாடலாம்; மரபு வழி அமைப்பை விரும்புவோர் "பரத நாட்டியக் கச்சேரியைக்" கைக் கொள்ளலாம்.

## முடிவுரை

எனினும் இறுதியாக, மரபு வழி அமைப்புப்பற்றியும் ஒரு வார்த்தை. புதிதான உருப்படிகள் (அலாரிப்பு தொடக்கம் தில்லானா ஈறாக) ஆக்குவித்து, புதிதாக நடன அமைப்புச் செய்து, அதாவது புதிய மார்க்கங்கள் உருவாக்கி — மேடையேற்றினால் —

மரபு வழி அமைப்பில் மாற்றந்தேவை என்ற சிலரின் முணு முணுப்பைக்கூட நிறுத்தி விடலாம்; நிறுத்திவிட முடியும் என்பது என் நம்பிக்கை. □

# கலைச்சாரல்

## புதியதொரு வீடு

10-9-89 அன்று யாழ் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் மேடையேறிய 'மஹாகவி' யின் புதியதொரு வீடு, நீண்ட காலத்திற்குப் பின் ஓர் தரமான நாடகத்தைக் கண்டு களிக்கும் வாய்ப்பினைத் தந்தது.

இந்தியத் தொலைக்காட்சியில், படமாக்கப்பட்ட மேடை நாடகங்களைப் பார்த்துப் பார்த்து மேடை நாடகத்தின் தன்மையினையே எம்மவர் மறந்திடுவரோ என அஞ்சி இருந்தவேளை, 'புதியதொரு வீடு' எமது நாடகக்கலையினை மீள நினைவூட்டுகின்றது எனலாம்.

அண்மைக் காலங்களில் சிங்கள மக்கள் மத்தியில் மொழி பெயர்ப்பு நாடகங்கள் செல்வாக்குப் பெற்று வருவதனை, இறுதியாக நடைபெற்ற தேசிய நாடக விழாவில் அவதானிக்கக் கூடியதாகவிருந்தது. இதனை, சிங்கள மக்கள் மத்தியில் நாடகத்துறையில் தேசிய தனித்துவத்தைப் பேணும் முயற்சியில் ஏற்பட்ட தளம்பலாகக், கருதலாம்.

அதனுடன் ஒப்புநோக்குகையில், எமது நாடகக் கலைஞர்கள் மத்தியில் தேசிய அரங்கு ஒன்றை உருவாக்குவதற்கான எத்தனத்தினையும், எம்மவர் அதற்கு வழங்கும் ஒத்துழைப்பையும் வெளிப்படுத்தும் ஓர் நிகழ்வாகவே 'புதியதொரு வீடு' நோக்கப்பட வேண்டும்.

மஹாகவியின் கவின் தமிழ் நடையுடன் கூடிய பா நாடகம் புதியதொரு வீடு. தனிப்பட்டவர்களை மிகுந்த இடர்ப்பாடுகள் சூழ்ந்திருக்கும் இவ்வேளையில்கூட, இந்நாடகம் பார்வையாளனைத் தன் கதைப் போக்குடன் ஒன்றச் செய்தது.

ஆரம்பத்திலேயே பிரச்சினையைக் கூறி பார்வையாளனின் உணர்வுத் தளத்தினை உச்சத்திற்குக் கொண்டு சென்று, பின்னர் சடுதியாகப் பிரச்சினை உருவான சூழ்நிலையினை விஸ்தரிக்கத் தொடங்கியபோது, கதைப்போக்கில் ஒரு தொய்வு தென்படவே செய்தது. பொதுவான கதைப்போக்கு சிறப்பாக அமைந்த பொழுதிலும் முடிவு, ஓர் ஜீரணிக்க முடியாத யதார்த்தமாகவே அமைந்தது.

இசையையும், நடனத்தையும் நாடகத்துடன் இணைத்துத் தருவதில் நெறியாளர்களான கலாநிதி சி. மௌனகுருவும் குழந்தை சண்முகலிங்கமும் வெற்றி கண்டுள்ளார்கள் என்றே கூற வேண்டும். நாடகத்தில் இழையோடியிருந்த தாள இலயம், தக்க ஏற்ற இறக்கங்களுடன் சீராக, பொதுவில் பேணப் பட்டிருந்தது.

எடுத்துரைஞர்களாக வந்தவர்களின் அசைவுகளும் நடிப்பும் நன்றாகவே அமைந்திருந்தன இதில் ஸ்ரீ கணேசனுடைய அசைவுகளும் நடிப்பும் இயல்பாகவே பொதுத் தாள இலயத்துடன் ஒத்திசைந்ததைக் காணக்கூடியதாகவிருந்தது. ஆயினும், எடுத்துரைஞர்களின் குரல் வளம் பண்படுத்தப்படாத தன்மையினையே காட்டிநின்றது. குருபரனின் குரல் ஓரளவு சோபித்தாலும், அவரது அசைவுகளும் நடிப்பும் பெரும் பிரயத்தனத்தின் மத்தியிலும், இசைபுத் தன்மை சற்றுக் குன்றியே காணப்பட்டது.

□□ கொ. றெ. கொன்ஸ்ரன்ரைன் □□

...டி. மின்னல், புயல், மீனவர்களாகத் தோன்றிய ஆண் பெண் இருபாலாரினதும் அசைவுகளும் நடிப்பும் பொதுவாக ஒத்திசைந்தன. ஆயினும் அதில் வந்த பெண்கள் நாடகத்துடன் ஒன்றாது, தமது நாட்டியத்திலேயே கூடிய கவனம் செலுத்தியது போல் தென்பட்டது; அவர்களது அபிநயங்கள் பெரும்பாலும், நாடகத்தினது உணர்வுகளுடன் ஒத்திசையாத தன்மையினைக் காட்டின.

பிரதான பாத்திரங்களை ஏற்று நடித்தவர்கள் நல்ல நடிப்பாற்றலினை வெளிப்படுத்தினார்கள். மன்னவனாக வந்த சபேசனின் நடிப்பு மிகைப் படுத்தப்பட்டதாக இருந்த பொழுதிலும், பாத்திரத்தின் தன்மை அந்த மிகைப்படுத்தலை ஈடு செய்துவிட்டது. கண்ணாத்தையாக வந்த ஹேமா, பாத்திரத்துடன் மிக இயல்பாக ஒன்றி சுறுசுறுப்பான — சிண்டு முடித்து வைக்கும் — கிராமத்துக் கிழவியாகி யிருந்தார்.

நாடகத்தை உள்வாங்கி அதன் தன்மைகளுக்கேற்ப — அதனிலும் மேலாக அதன் தன்மைகள் வலிவு பெறும் வகையில் — இசையமைக்கக் கூடிய தனது ஆற்றலினை கண்ணன் 'புதியதொரு வீடு' மூலம் வெளிப்படுத்தியுள்ளார். இசையமைப்பு, நாடகம் ஏற்படுத்திய உணர்வுகளுக்கு வலுவூட்டி நின்றதனைத் தெளிவாகக் காணக்கூடியதாயிருந்தது. ஆயினும், மாயன் திரும்பிவந்ததும் மயிலி வந்து ஆச்சரியத்துடன் 'ஆ... நீங்களா...?' எனக் கூறுமிடத்தில் மயிலியாக வந்த மாலினி

(11ஆம் பக்கம் பார்க்க)



எர்னஸ்டோ கார்டினல்
( நிகரகுவா )

## அடோல்ஃபோ பேஸ் போனின் நினைவுச் சின்னத்தில் பொறிப்பதற்காக

உன்னை அவர்கள் கொன்றார்கள்
உன்
உடலைப் புதைத்த இடத்தைக் கூறவில்லை.
இந்த நாடே
உனது நினைவுச் சின்னமாதலால்,
நிகரகுவாவில்
நீ புதைக்கப்படாத ஒவ்வொரு அங்குலத்திலும்
நீ பிறந்துவிட்டாய்.
'சுடு'!
என்ற ஆணையால்
அவர்கள் உன்னைக் கொன்றதாக நினைத்தார்கள்.
அவர்கள் செய்ததெல்லாம்
ஒரு விதையைப்
புதைத்ததுதான்.

* நிகரகுவாவின் விடுதலைப் போராட்டத்தின் தந்தையான அகஸ்டோ சாண்டினோவின் கல்லறை எங்குள்ளது என்று யாருக்கும் தெரியாது. இதைப்போலவே 1954லிலும் நடந்தது. அப்போது சர்வாதிகாரியாக இருந்த அனஸ்தாசியோ சோமோசா கார்சியாவைக்கொல்ல நடந்த முயற்சி தோல்வியடைந்தது. கொல்ல முயன்ற புரட்சியாளர்களில் அடோல்ஃபோ பேஸ்போன் என்பவரும் ஒருவர்.

ஆங்கிலம் வழி தமிழில்: நாகார்ஜுனன்
நன்றி: உலகக் கவிதை

## வெயில் மழை புழுதி

சில நாளின் முன்பு
எனக்குள்ளே ஒருவன் இருந்தான்.

அவனுக்கும் கண்கள் இருந்தன.
காதுகளும் உண்டு.
இதயம் மட்டும் மற்றவர்போல் இல்லாமல்
மென்மையாய் இருந்ததனால்,

அவன்
இந்த உலகத்தைப் பார்த்து அழுதான்.
அதுதான் மழை!

அவன்
இங்குள்ள கொடுமைகள் தாங்காமல்
விட்ட பெருமூச்சு
இப்போது மரங்களிலே படிந்துள்ள புழுதி!

அவன் எப்போதுமே குறைகளைத்
தேடிக்கொண்டிருந்தான்.
பறவைகளுக்கு
இரு சிறகுகள் போதாது
நான்கு சிறகு தேவையென்று நினைத்தான்!

இந்தச் சூரியனையும்
அதைக்கண்டு பயருகின்ற நிலவையும்
சேர்த்துவைத்துச் சந்தோஷம் பார்க்க
ஒரு பாலம் போடத் துணிந்தான்.
மனிதர்கள் சிரித்தார்கள்.
தம் பலங்கள் தெரியாமல்தான்
அவர்கள் நகைத்தார்கள்.
எல்லோரும் ஒன்றுபட்டால் பூமியின்
சுழற்சியையும்
நிறுத்த முடியுமென்று
அவர்களுக்கு விளங்கவில்லை.

எரிச்சல் பட்ட அவன்தான்
வானத்தில் இரவுகளில் வெள்ளியைப்போல்
ஓடுபவன்.
அவனது கோபம்தான்
வெயில்!

— சோலைக்கிளி □

# உணர்வுகளை உயிர்ப்பிக்கும் மரச் சிற்பங்கள்

கல்லிலே கலைவண்ணம் கண்ட தமிழனுக்கு சிற்பக்கலை அந்நியமான ஒன்றல்ல. ஓவியம், இசை, சிற்பம் என்னும் சகல உயர்ந்த கலை வடிவங்களின் தரிசிப்புக்களமாக தமிழர் கலாசாரம் இருந்து வந்துள்ளது என்பதும் மறுப்பதற்கில்லை. ஆனால் இன்று?

வாழ்க்கையின் சகல அம்சங்களும் வியாபார மயமாக்கப்பட்ட இன்றைய சூழலில், கலைக்கும் கத்தரிக்கோலுக்கும் முடிச்சுப்போடும் பிறழ்வுற்ற — நோய்பீடித்த மனங்கள் தான் மிஞ்சியுள்ளன போலவே படுகிறது.

அதனால்தான் போலும் தமிழனோடு ஒப்பிடும்போது, வரலாற்று ரீதியாக மிகப் பிந்தி வந்த மொழி, கலாசாரக் குழுக்கள், இனங்களிடையே தோற்றியுள்ள கலைபற்றிய பன்முகப்பட்ட விழிப்பு, தமிழ் மண்ணைத் தொடாது போயுள்ளது. இதனால்தான் நமது அயலவரான சிங்களவர், நவீன நாடகத் துறையில் 'சக்கை போடு' போடத் தொடங்கிய காலத்தில் நாம் 'அடங்காப் பிடாரி'யையும் 'வடக்கும் தெற்கையும்' நாடகமாக ரசித்துள்ளோம். இதே காரணத்தால்தான் சினிமாத் துறையில் அவர்கள் உலக விருதுகளாக தங்க மயில்களை பெற்றுக்கொண்ட போது, நாம் வாள் வீச்சுப் பிரதாபங்களையும் 'கோர்ட் சீன்' வசன பிரசங்கங்களையும் சினிமாவாகக் கண்டு மயங்கியுள்ளோம். ஓவியம், சிற்பம், இசை இவற்றிலும் இதே கதைதான். அவர்கள் இவற்றில் தமது சுதேசியத் தன்மையைப் புகுத்தி உயர்வுகள் கண்ட போது, நாம் சேற்றில் விழுந்த எருமைகளாய் இவைபற்றி எந்தச் சூடு சுரணையும் அற்று இருந்துள்ளோம்.

□ வி. எம். பி. □

இவற்றுக்கெல்லாம் காரணம், நான் ஆரம்பத்தில் குறிப்பிட்ட, கலை இலக்கியத்துள் புகுந்துவிட்ட நோய்க்கூறு கொண்டவியாபாரிகளே. ஆழ்ந்த கலை இலக்கிய விமர்சனங்களுக்கு முகங் கொடுக்கத் திராணியற்று, ஊனமுற்ற தனது உறுப்புகளை மக்களுக்குக் காட்சிப்பொருளாக்கி பிச்சை எடுக்கும் பிச்சைக்காரர்கள் போல், தமது சமூகப் பலவீனங்களைக் காட்டி கலை, இலக்கிய பிஸ்னஸ் செய்யும் இந்த நோய்க்கூறு கொண்ட மனங்கள்......

2

ஆனால் இந்த நோய்க்கூறுகள் அதிகம் நீடிக்கப் போவதில்லை என்பதற்குரிய கருக்கூட்டல் இன்று பரவலாகத் தெரியத் தொடங்கியுள்ளது.

ஈழத் தமிழ் மண்ணுக்கு அந்நியமாய் இருந்த ஓவியக் கண்காட்சிகள் பல இடம் பெறத் தொடங்கியுள்ளன. நாடகத்துறையில் ஏற்கனவே அ. தார்சீசியஸ், க. பாலேந்திரா போன்றவர்களால் மரபுடைப்புகள் நிகழ்ந்துள்ளன. அதன் தொடர் விளைவாகவே அண்மையில் யாழ். பல்கலைக் கழகத்தில் நடந்தேறிய ஐயாத்துரை விஸ்வலிங்கம் அவர்களின் சிற்பக் கண்காட்சியையும் சொல்லவேண்டும்.

பொதுவாக கோவில் கோபுரங்களிலும், கோவில் தேர்களிலும் வனையப்படும், செதுக்கப்படும் சிற்பங்களே நமது சிற்பக் கண்காட்சிகளாக இருந்துவந்துள்ளன. ஒரு கலைஞனின் தனியான சிற்பக் கண்காட்சி என்ற ஒன்றுக்கு ஈழத்தமிழுலகு பழக்கப்பட்டதில்லை. கதியள்ளும் கண்டி நாட்டு அகப்பையைக்கூட சிங்களவர் கலைப்பொருளாக்கி, காட்சிகள் பல வைத்துள்ளனர். அத்தகைய பழக்கங்கள் கலைபற்றி அதிகம் அலட்டிக் கொள்ளும் நமக்கு அந்நியமாக இருந்துவந்துள்ளது வியப்புக்குரியதே.

ஆனால் இந்த அந்நியத் தன்மையை நீக்குவது போல், இரண்டு வாரங்களுக்கு முன்பு நடந்தேறிய சிற்பக் கலைஞர் விஸ்வலிங்கம் அவர்களின் சிற்பக் கண்காட்சி அமைந்திருந்தது. ஆனால் திரு விஸ்வலிங்கம் அவர்கள் கூட, கண்டியைச் சேர்ந்தவராய் இருந்து சிங்களப் பகுதிகளிலேயே தன் வாழ்க்கையின் பெரும்பகுதியைக் கழிக்க நேர்ந்ததின்

(11 ஆம பக்கம் பார்க்க)

## தூவானம்

ஈழத்து நூல் கொள்வனவு சம்பந்தமாக, பல்வேறுபட்ட எழுத்தாளர்கள் சஞ்சிகை — நூல் வெளியீட்டாளர்கள் அழைக்கப்பட்டு ஆலோசனைகள் பெறப்பட்டுச் செயற்பட வேண்டியதைச் சுட்டிக் காட்டிய குறிப்புகள், 11-8-89 தூவானத்தில் வெளிவந்திருந்தன. அவற்றைக் கணக்கிலெடுத்து, அவ்வாறானதொரு சந்திப்பினை யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சு. டிவகலாலா, சென்ற 14 ஆம் திகதி ஒழுங்கு செய்திருந்தார்; அவருக்கு எமது பாராட்டுகள்.

எமது பிரதேசம், எமது மக்கள், எங்கள் கலைஞர்கள், அவர்களது படைப்புகள் என்பவற்றின் மீதான அக்கறையினை அவர் தனது உரையில் வெளிப்படுத்தி, நூல் கொள்வனவு — நூற் கண்காட்சி தொடர்பான ஆலோசனைகளை, வருகை தந்தோரிடம் கோரினார்.

பதினன்கு பல்கலைக்கழக ஆசிரியர் கையெழுத்திட்ட ஆலோசனை அறிக்கையினை, எம். ஏ. நுஃமான் வாசித்து அவரிடம் கையளித்தார். ஆக்கபூர்வமான ஆலோசனைகள் அதில் அடங்கியிருந்தன. (அவற்றில் சில சென்றவாரத் 'திசை'யில் வெளிவந்துள்ளன).

பின்னணியில் அமைதியாக இருந்து, ஈழத்து நூல்களின் வெளியீட்டில் காத்திரமான பணிகளை ஆற்றிவரும் இ. பத்மநாப ஐயரும் பயனுள்ள, பல்வகைப்பட்ட ஆலோசனைகளைத் தெரிவித்தார். ஒரு பக்கத்திற்கு இவ்வளவு என்று விலை குறிப்பதிலுள்ள பல்வேறு பிரச்சினைகள், வியாபார வெளியீடுகள் பெரிதும் தோன்றக்கூடிய அபாயம் — ஆகையால் தரத்தினைக் கணக்கிலெடுக்க வேண்டியதன் அவசியம், தர நிர்ணயக் குழுவில் வெவ்வேறு கண்ணோட்டமுள்ளோர் இடம் பெறவேண்டும் என்பன போன்றவற்றை அவர் முன் வைத்தார். எழுபதுகளில் இந்தியப் புத்தகத் தடையிருந்த போது வியாபார வெளியீடுகள் இங்கு வெளிவந்ததைச் சுட்டிக்காட்டி, தரம் பேணப்பட வேண்டுமென்ற கருத்தை நா. சுப்பிரமணிய ஐயரும் வற்புறுத்தினர்.

நூல்களைத் தெரிவு செய்யும் பொறுப்பை நூலகர்களிடம் விட்டுவிடவேண்டும்; அக்குழுவில் எழுத்தாளர் யாரும் இருக்கக் கூடாது என, செம்பியன் செல்வன் தெரிவித்தார். ஆனால், இதில் ஒரு ஆபத்து உண்டு. நூலகர்கள் எல்லாம் நல்ல நூல்களைத் தெரியும் திறனுடையவர்களாக இருக்கிறார்களா? இன்று ஈழத்துநூல்களில் அக்கறைகொள்ளாது, இந்திய ஜனரஞ்சக நூல்களைப் பெருமளவில் கொள்வனவு செய்பவர்களும், இவர்களல்லவா?

வேறு பலரும் தமது கருத்துக்களைத் தெரிவித்த இச்சந்திப்பில், சிலர் சம்பந்தமில்லாதவற்றையும் கதைத்தார்கள். யாழ் கச்சேரியில் முன்பு இயங்கிய கலாசாரக் குழுவின் குறைபாடுகளை ஒருவர் விஸ்தாரமாக விளக்கினார். இன்னொரு சஞ்சிகையாசிரியர், தேநீர் குடித்தபடி எழுத்தாளர்கள் கதைப்பதற்கு ஒரு மண்டபம் தேவை என்பதையும், இரண்டு எழுத்தாளர்கள் கஷ்டப்படுவதாகவும் அவர்களிற்கு உதவவேண்டுமென்பதையும் குறிப்பிட்டார். கூடியிருந்த நோக்கத்திலிருந்து விலகிய இவ்விருவரின் பேச்சுக்கள், பலரின் பொறுமையைச் சோதித்தன.

இறுதியில், மார்கழி மாதத்திற்கு முன்னர் ஒவ்வொரு நூலிலும் 200 பிரதிகள் கட்டாயம் வாங்கப்படும் என, ஆணையாளர் தெரிவித்தார். நூற்கண்காட்சிக்கென குழுவொன்றும் அமைக்கப்பட்டது.

எழுத்தாளர்களிடையில் ஒருவித உற்சாகம் தெரிகிறது.

— நீலாம்பரன் □

**திசை** THISAI

**சிறுகதைப் போட்டி மூன்றாம்பரிசுக் கதை**

சென்றவாரத் தொடர்ச்சி

# முதுகச் சொறியுங்கோ!

□ அல் அஹமத் □

அதிலும் ஒரு சிக்கல் வரும்போல் தெரிகிறது. மனைவி என்னமோ தூக்கத்தில் அனுங்குகிறாள் ... நான் பரிசை வாங்கப் பேப்பர்காரர்கள் பிரஸ்ஸை இழப்பார்கள்!

க்கும்! இவள் விழித்தே விட்டாள்.

''என்னப்பாது, இன்னுந் தூங்கல்லீயா?''

"ம்! ..."

''இந்த மனுசன் இப்பிடி ராத்திரி பகலா யோசிச்சி யோசிச்சிப் பைத்தியந்தாம் புடிக்சப் போகுது!''

"ம்!"

திரும்பிப் படுக்கிறாள் ...... படுக்கட்டும், பகல் முழுக்க மாரடிக்கும் மனைவிக்கு இரவிலாவது நல்ல தூக்கம் அவசியம்.

பரிசு கிடைத்தால் மட்டும் அந்தப் பணத்தையோ புகழையோ இவள் வேண்டாமென்றுதான் சொல்லி விடுவாளா? இவளும் ஜானகி, ஜெயலலிதா வம்சம்தானே? ச்சே, பாவம்! என்ன இருந்தாலும் அந்த அம்சத்தைப் புகுத்தி இவளை நான் புண்படுத்தக் கூடாது! ......

ஆறேழு வருஷத்துக்கு முதல் இப்படித்தான், இரவிரவாகக் கண்விழித்து பிரமச்சரிய விரதமும் பூண்டு, மூன்று நான்கு வாரங்களாகத் தனி வெண்பாவில் ஒரு நெடுங்கவிதை எழுதினேன் பூஜை மாதிரித்தான். பஞ்சாமிர்தம் காதுகளில் நிறைந்த மாதிரி அமைதியாக வேள்வி செய்தேன். அதைப் புத்தகமாகவும் போட்டேன். நகையைப் பிறகு செய்யலாம் என்று கூறிவைத்தேன். ஐந்து வருஷமாகக் கொஞ்சமாகவா ஊடினாள்? புத்தகம் போடும் பிரச்சினை வள்ளுவருக்கு இருக்கவில்லை. இருந்திருந்தால்,

எழுத வேண்டாம், யோசிக்க வேண்டாமென்று இப்படித் தூங்கினால், நான் என்ன வசிஸ்டரா - என் எழுத்துத் தவத்தைக் குலைத்துக் கொள்ள?

...... என் தவறை நானும் ஒத்துக்கொள்ள வேண்டும்தான். அவளை நிம்மதியாக உறங்க வைத்துவிட்டு நான் பின் தூங்கிப் பின்னெழ வேண்டும் இலக்கியம் வந்து விட்டால் இல் ஐக்கியம் கெட்டுப் போக விடக்கூடாது!

என்ன செய்வது! இலக்கியம் என் முதல் மனைவி என்று நானே பீத்திக் கொள்கிறேன் —புத்தகம் போடுவது பிரசவம் மாதிரி என்று தாயின் பிரசவத்தையே கொச்சைப் படுத்துகிறது போல ...... 'இல்லறக் காப்புக்குப் பிறகு தான் இலக்கியம் பிறக்கும்!'

அந்தக் குறளைப் பிடுங்கி எறிந்துவிட்டு, ''ஆடுதல் காமத்துக்கு இன்பம்; அதற்கின்பம் போடுதல் பொன்னு பரண்!'' என்றல்லவா பாடியிருப்பார்! புத்தகத்தை வெளியிட்டேன். போன வருஷம் வரையில் டைவஸ் செய்த மாதிரித்தான். பிறந்த பிள்ளை என்னமோ அருட்டுணர்வில்தான் பிறந்திருக்க வேண்டும்! எப்படியோ, என்னைப்போன்ற அப்பாவிகளை

வைத்தும் புகழ் சம்பாதிக்கும் ஒருசிலரும் இருக்கத்தான் செய்கிறார்கள்! இந்த வெண்பாவுக்குப் போய் அந்த வருஷத்தின் சிறந்த கவிதைநூல் என்று மைசகுக்கும் கெமராவுக்கும் முன்னே நின்று ஒரு 'செக்'கைக் கொடுத்துவிட்டார்கள். மறுநாளே மரியாதையாகச் செக்கை வட்டிசகு மாற்றி, இன்னுங்கொஞ்சம கடனபட்டு, சொன்னதில் பாதிநகையைச் செய்து போட்டேன். அத்தோடு பிரச்சினை பூஸாவுககுப் போய் விட்டது. இப்போது அவசரத்துக்கு ஈடு வைக்கக் கேட்டால் கூடக் கழற்ற மாட்டேன் என்கிறாள்! இப்போது இவள் மறுபடியும் வேதாளமாகப் பார்க்கிறாள்!

என்று யாராவது மந்திரவாதி மாதிரி சைக்காலஜி எழுதி வைத்திருந்தால் நிச்சயமாக நானும் நீங்களும் எல்லோருமே அதற்குப்பலியாகி இருப்போம்! அதன் பிறகு எல்லாப் பெண்டுகளுமே இலக்கியக்காரனைத்தான் கட்டுவோம் என்று நிற்பார்கள்; இப்போது ஏறுக்கு மாறு!

இப்போது அந்தப் பலவீனமெல்லாம் வேண்டாம். கதைதான் வேண்டும். இன்னும் ஐந்தாறுநாள்தான் மிச்சம். தபால் என்னவாகுமோ, அதுவும் தெரியாதே! இன்றிரவு எப்படியும் குறிப்பெடுத்துவிட வேண்டும். நாளை நின்று அதை மறுபடியும் செப்பனிட்டு விட

வேண்டும். எழுத்துக்கென்றே பிறந்தவர்களுக்கு ஒருதரம் எழுதினால்போதும். இரண்டாம் முறை திரும்பிக்கூடப் பார்க்க மாட்டார்கள். வாசகர்களுக்கு அப்படி ஒரு தண்டனையை நான் கொடுக்க மாட்டேன். வாசகர்கள் இளிச்சவாயர்களானால பரவாயில்லை. எனக்கு இரண்டு மூன்று முறையாவது அடித்துக் கிழித்துத் திருத்தினால்தான் ஆழியில் குளித்த சுகம் வரும்.

சரி, திமுக்கு வருவோம். ஒரு கதாநாயகன். அவன் தமிழ் வளர்க்கிறான் ......

அடச்சீ! தமிழ்ச் சினிமாவுக்குக் கதை கட்டுகிற மாதிரி! தமிழை எந்தக் கதாநாயகன் வளர்த்தான்? தமிழ் அல்லவா ஒவ்வொருத்தனையும் வளர்த்துக் கொண்டிருக்கிறது! பாரதி தமிழ் வளர்த்தானா, பாரதியைத் தமிழ் வளர்த்ததா? இது கூட நல்ல ஒரு ப்ளொட்தான். ஆனால் அது கட்டுரைக்குத்தான் சரி.

கதாநாயகன். அவன் ...... அவன்?

இந்த நடுவர்கள் சோஷலிஸ்ட்டுகளாக இருப்பார்களோ? அப்படியானால் ஆன்மீகவாதி சுரண்டுவதாக இருக்கவேண்டும். முதல் பரிசு சத்தியம்! ஓர் ஐயர் பண்டாரப் பொடியனை நொறுக்கி, இருநூறு முன்னூறு சம்பாதித்ததாகக் கோயிலும் கட்டலாம்; அதில் உட்கார்ந்து பூவும் சுற்றலாம்.

இவர்கள் ஆன்மீகவாதிகள் என்றால் சோஷலிஸ்ட்டு காசு லிஸ்ட்டை ஏந்திச் சுரண்டுவதாக அமைக்க வேண்டியதுதான்! சுரண்டுதல் என்னவோ சோஷலிஸ்ட்டுக்கும் பொதுவானது ஆன்மீகவாதிக்கும் பொதுவானதுதானே! சோஷலிஸ்ட்டு என்ற பதப்பிரயோகம் சரிதானா?...... வேண்டுமானால் என் பெயரைக் காப்பாற்றிக் கொள்ள மானிடவாதி என்று போடுவோமே!

இந்த மானிடவாதிக்கு மட்டுந்தான் மானிடம் வருமென்று என் நண்பன் (?) ஒருவன் கூறினான். அதனால்தான் அவன் மானிடவாதி வட்டத்தில் சேர்ந்தானாம். அதற்கு முன் எப்படி இருந்திருப்பான்? என்னைக்கூடச் சேரச்சொல்லிக் கரைச்சல்.

போன மாதம் ஒரு மானிடக் கூட்டத்துக்குப்போனேன். அறுபது, எழுபது மானிடர்கள் வந்திருந்தார்கள். மேடையில் ஆறு ஏழோ மானிடர்கள். சபையில் எக்கச்சக்கமான புழுக்கம். புழுக்கம் சரியா...... புளுக்கம் சரியா? ஏதோ, புழுளுக்கம்! எல்லாம் வாய்ச் சூட்டு வினை! மேடை மானிடர்கள், நான்கைந்து போத்தல் இஞ்சிச் சோடா வாங்கிக் குடித்துக் குடித்தே பேசினார்கள். ஏனைய மானிடர்கள் தொண்ணுந்துபோய் இருந்தோம். இனிமேல் மானிடக் கூட்டத்துக்குப் போனால் நாம் குடிப்பதற்கும் ஏதாவது கொண்டுபோக வேண்டும். பஞ்சு சோடா நல்லது.

ஆ ஹாஹா! இதையே ப்ளொட்டாக வைத்து என் கதையை எழுதி விடலாமே! தலைப்பு மானிடம்! மனிதம் என்றும் வைக்கலாம். மனுஷ்யம் என்றாலும் புதுக்கவிதையைப் போல ஹெல்மட்டோடு நிற்கிறது! சிங்களத்தில் மொழிபெயர்த்தால் மனுஷ்யத்வய! மகனிடம் கொடுத்தால் சிங்களத்தில் பெயர்தது 'விவரண'யில் போட்டு விடுவான். ஆங்கிலத்தில் ஹ்யூமனிஸம்! கம்யூனிஸம் என்றும் வைக்கலாமே! ரஷ்யா வரையில் போகுமே!!

அட, அதிலும் ஒரு சங்கடம் கிடக்கிறதே! போன வாரம்தான் ஒட்டுக்கவிதை உத்தமசீலன் எனக்குப் புதிய ஐடியா ஒன்றைக் கொடுத்திருக்கிறான்.

''அட பேப்பயலே! முப்பது வருஷமா எழுதுறியே, இது வரைக்கும் எவனாவது ஒருத்தன் ஒன்னையப்பத்தி மேடையிலயோ பேப்பர்லயோ குசினிக்குள்ளயோவாவது சொல்லி இருப்பானா? ரெண்டே வருஷத்தில ஏம்பேரு இந்தப் பக்கம் ரஷ்யா வரைக்கும் அந்தப் பக்கம் அமெரிக்கா வரைக்கும் போயிறுக்கு! இப்ப நாஞ் சொல்ற மாதிரி செய்! பேசாம ஒரு வட்டத்தில சந்தாதாரனுச் சேந்துக்க! விடியல், ரத்த புஷ்பம், ஜனஸமுன்யம், புரட்சி, சிவப்புன்னு அடிக்கடி எழுது. சிகப்புன்னு எழுதுனா இன்னும் விசேஷம்! அதுக்குப் பொறகு பாரு, ஆஹாம்பான்; இல்லேன்னா ஓஹோம்பான்! எத எழுதணும், எப்பிடி எழுதணும்னு நீ ஒண்ணும் யோசிக்க வேண்டியதே இல்லகன்னு பின்னவுக்குக் கருத்துச் சொன்ன மாதிரி ஒன்ட ஒவ்வொரு பேத்தலையும் காத்திரம்பான்! யாருக்கும் எதுவுமே வௌங்கணுமேங்கிற பிரக்ஞையே வேண்டியதில்ல; எம்ஜியார் பேசுறமாதிரி எழுதீட்டா அது புதிய இலக்கியம்! கொஞ்சக் காலத்துக்குப் பொறகு நீ எழுத வேண்டியதுகூட இல்ல! நீ எதயாவது ஒளறிக்கிட்டே இருக்கவேண்டியது; அவனவன் அத 'டேப்' பண்ணிக்கிட்டுப் போய்றுவான்! அப்புறம் வெள்ளி விழா, பொன் விழா, மணி விழா, வைர விழா, சாம்பல் விழா எல்லாமே வரும். அந்த வட்டத்தில ஒருத்தன் காத்து விட்டாக்கூட, 'ஆஹா! நறுமணம்'னு மட்டும் சொல்லப் பழகிக்க! ந்த முன் பல் ரெண்டையும் புதுசாக் கட்டிக்க!''

இப்படிப் புத்திகெட்ட என் எதிர்காலம் அத்தனையும் வீணாகும்படியாக நான் கதை எழுத முடியுமா? வேண்டாமே! எழுத்துச் சுதந்திரம் வந்த பிறகு அப்படியெல்லாம் எழுதலாம்.

சரி, இப்போது எதைத்தான் எழுதுவது? போட்டி முடிந்துதான் ப்ளொட் வரப்போகிறது!...... இந்த மாதிரி நேரங்களில்தான் பேனையை ஒடிக்க வருகிறது — பாரதியை யானை கொன்றது போல.

சீ, எவ்வளவு புழுக்கமாகக் கிடக்கிறது. இவள் எப்படி இப்படித் தூங்குகிறாள்?

பாவம், இன்று 'டினஸ்ட்டி' போகும்போதே இவளுடைய பார்வை சரியில்லாமல் இருந்தது!... .. பாவம்தான் இவள்! ... இலக்கியம் செய்வதை விட இல்லறம் செய்வது லாபமாகத் தெரிகிறது!......

சரி, என்ன தீம் நல்லது?

புரண்டு படுக்கிறாள்.

சாம்பாராக ஒரு தீம்? ஒரு குண்டும் ஒரு குழந்தையும்; ஒரு பயங்கரவாதியும் ஒரு பயந்தாங்கொள்ளியும்; ஒரு மாங்காயும் (அல்லது மாங்கொட்டையும்) ஒரு ஜோடிப் பாதரட்சையும்......

''முதுகக் கொஞ்சம் சொரிஞ்சி விடுங்களேன்!'' என்று இவள் பின்புறமாக நச்சரித்து நெருங்குகிறாள் ...

இலக்கியம் படைக்கு முன் மனைவிக்கு முதுகு சொறிவது கூடப் பிள்ளையார் சுழி போலத்தானா? .....



## ஒட்டகங்களும் புகை பிடிக்கின்றன

மொரொக்கோவில் உள்ள இனத்தவர் ஒட்டகங்களின் மூர்க்கத்தனத்தைக் தணிய வைப்பதற்காக அவற்றுக்கு புகைபிடிக்கப்பழக்கியுள்ளனர். ஒட்டகத்தின் வாயினுள் ஒரு முக்கோண வடிவிலான சிறு மரப்பெட்டியை வைத்து அதன் நடுவிலுள்ள துளையில் பற்றவைத்த சுருட்டை வைக்கின்றனர். ஒட்டகம் மூச்சு வாங்குகையில் சுருட்டும் புகைக்க ஆரம்பிக்கிறது. இந்தப் புகையின் லாகிரியில் ஒட்டகம் அமைதியுறுகிறது. அதனால் அதனை மனிதன் இலகுவாகக் கட்டுப்படுத்தி அமைதிப் பணம் செய்கிறான். □



இக்காலத்தில் இந்துக்கள், குறிப்பாக சைவர்கள் திருப்பணி என்ற பேரில் கோயில்கள், தேர்கள் என்று கட்டுகிறார்களே, இவை உண்மையான திருப்பணியாகுமா?

சரி, இதற்கு நீங்கள் முதலில் பதில்தரவேண்டும்: நாம் ஏன் திருப்பணிகள் செய்கிறோம்?

கடவுளை அடைவதற்காக. அதாவது புண்ணியம் செய்வதற்காக. புண்ணியம் செய்தால் கடவுளை அடைவதற்குரிய வழி திறபடுகிறது.

அப்படியானால் இனி அடுத்த கேள்வி: கோயில் கட்டுதல், தேர் கட்டுதல் இன்னும் இவை போன்ற கோயிலோடு சம்பந்தமுடையவை செய்தல் இன்று புண்ணியம் தரும் செயலாகுமா?

நமது முன்னோர் கோயிலோடு சம்பந்தமுடைய காரியங்களைச் செய்தல் புண்ணிய காரியம் என்றுதானே சொல்லியுள்ளார்கள்? நமது வேத சாஸ்திரங்களும் அப்படித்தானே கூறுகின்றன?

சரி, நீங்கள் சொல்வதுபோல் இவற்றின் சரி பிழையைத் தீர்மானிப்பதற்கு நமது வேத சாஸ்திரங்களையே நாம் அளவு கோலாகக் கொள்ளவேண்டும், இல்லையா?

ஆம், நமது வேத சாஸ்திரங்கள் இவைபற்றி என்ன கூறுகின்றன?

# திருப்பணி என்றால் என்ன?

நமது பண்டைய வேதத்தில் இரண்டு விஷயங்கள் சொல்லப்பட்டுள்ளன. ஒன்று சுருதி. மற்றது ஸ்மிர்தி.

சுருதி என்றால் என்ன, ஸ்மிர்தி என்றால் என்ன?

திருச்சண்டன்

சுருதி என்பது கடவுளின் இருப்பை அழுத்துவது. இருப்பது கடவுள் ஒருவரே என்றும் சகலதும் அவர் மயமே என்றும் அழுத்துவது சுருதி. இதுவே மகாவாக்கியங்கள் எனப்படும்.

அப்போ ஸ்மிர்தி?

சுருதி அழுத்தும் கடவுளை அடைவதற்குரிய வழிவகைகளைக் கூறுவதே ஸ்மிர்தி.

இந்தச் ஸ்மிர்தி கூறும் வழிவகைகள் என்னென்ன?

இந்த வழிகள் எக்காலத்துக்கும் ஒன்றாய் இருந்ததில்லை. காலத்துக்குக்காலம் மாறுபடுபவை. ஒரு காலத்தில் கடவுளை அடைவதற்குரிய வழிகளாகக் காட்டப்பட்ட புண்ணிய காரியங்கள் இன்னொரு காலத்தில் வேறாக மாறியுள்ளன.

உதாரணம் என்ன?

ஆதிகாலத்தில் வேள்விகள் செய்து, அதன் மூலம் வரும் புண்ணியத்தின் மூலம் கடவுளை அடையும் வழிகளைச், சித்திகளைக் கண்டனர். பின்னர் கோயில்களை ஸ்தாபித்து, கடவுளின் லட்சணங்களை மூர்த்தம் செய்து அதன் மூலம் கடவுளை அடையும் வழிகளைக் காட்டினர். எந்தெந்தக் காலத்தில் என்னென்ன வகைகள் மக்களை நெறிப்படுத்தி, அவர்களை உயர்ந்த நிலைக்கு இட்டுச்செல்ல உதவினவோ, அவை புண்ணிய காரியங்களாகவும் கடவுளை அடைவதற்குரிய வழிகளாகவும் போற்றப்பட்டன. அவையே அக்காலத்துக்குரிய ஸ்மிர்தி.

அப்படியானால் இக்காலத்தில் கோயில் கட்டுதல், தேர் கட்டுதல் போன்றவை புண்ணிய காரியங்கள் இல்லையென்று சொல்கிறீர்கள்?

ஆம்,

அப்படியானால் இக்காலத்துக்குரிய புண்ணிய காரியத்தையும் புண்ணிய காரியம் அல்லாதவற்றையும் இனம் பிரித்து அறிவது எப்படி?

அந்தந்த காலத்தில் கடவுளின் இருப்பைத் தரிசித்த ஞானிகளும் தபசிகளும் இதற்கு அளவுகோல். இவர்களே அந்தந்தக் காலத்துக்குரிய கடவுளை அடைவதற்குரிய மார்க்கங்களையும் புண்ணிய காரியங்களையும் காட்டிச் சென்றுள்ளனர். இன்றும் அத்தகைய ஞானிகளை கொண்டே ஸ்மிர்தியின் மாற்றங்களை — அதாவது தற்காலத்திற்குரிய திருப்பணிகள் எவையென்பதை அறியவேண்டும்.

அத்தகைய ஞானிகள் தற்காலத்தில் இருந்திருக்கிறார்களா?

ஏன் இல்லை. 19 ஆம் நூற்றாண்டின் இறுதிவரை வாழ்ந்த ஸ்ரீராம கிருஷ்ணர், அவரது சீடர்கள், வெகு அண்மைக் காலம்வரை வாழ்ந்த ரமணர், அரவிந்தர், ராமதாஸ், காந்தி, ராமலிங்க சுவாமிகள் இத்தகைய ஞானிகளே. இவர்கள் கோயில், கட்டுவதையோ, தேர் கட்டுவதையோ, திருப்பணியாகச் செய்யவில்லை. மாறாக இவர்கள் நோயாளர்களுக்குப் பணி செய்துள்ளார்கள், ஏழைகளுக்குத்தானம் வழங்கியுள்ளார்கள், சமூக சேவையில் மும்முரமாக ஈடுபட்டுள்ளார்கள், பள்ளிக்கூடங்கள் நிறுவியுள்ளார்கள். படமாடும் தெய்வத்தைவிட்டு நடமாடும் தெய்வங்களுக்கே பால்வார்த்துள்ளார்கள்! இவர்களைக் கொண்டே ஸ்மிர்தியின் மாற்றத்தை உணர வேண்டும். இவற்றை உணராது இன்னும் நாம் — அதுவும் இன்றைய காலத்தில் கோயிலும் தேரும் கட்டிக் கொண்டிருப்போமானால், புண்ணியம் தேடுவதற்குப் பதிலாக மேலும் கர்ம மூட்டையைக் கட்டிக்கொண்டவர்களேயாவோம். □

# நாட்டின் மூன்றில் இரண்டுபகுதிகளில் தமிழ் ஒலிபரப்பைக் கேட்க முடிவதில்லை

நாட்டின் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் உட்பட தெற்கு, ஊவா, சப்ரகமுவா மாகாணங்களிலும் தமிழ் ஒலிபரப்பைக் கேட்க முடியாத அவல நிலை இருந்து வருகிறது. இதனால் வடக்கு, கிழக்கில் மட்டும் 25 லட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வடக்கில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களில் கடந்த ஐந்தாண்டு காலமாக, அதாவது 1984 ஜுலை மாதம் தொடக்கம் தமிழ் நிகழ்ச்சிகளைக் கேட்க முடியாதிருக்கிறது. இதன் காரணமாக செய்திகள், விஷேட அறிவித்தல்கள், ஊரடங்கு நேரங்கள் போன்ற முக்கிய தகவல்களைப் பெற முடியாதிருக்கின்றது.

இதன் காரணமாக நாட்டில் ஏனைய பகுதி செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியாதுள்ளது. மாறாக சென்னை, திருச்சி, திருநெல்வேலி, மதுரை வானொலி நிலையங்களின் செய்திகளையும், பாடல்களையுமே கேட்க வேண்டியுள்ளது.

நீர், மின்சார வசதிகளற்ற மன்னார் தள்ளாடி ஒலிபரப்பு நிலையத்தில் தற்போது தற்காலிகமாக ஒலிபரப்பு நிலையம் அமைத்துள்ளனர். இவ் ஒலிபரப்பு கடந்த மூன்றுண்டு காலமாகச் செயல்பட்டும் தமிழ் நேயர்களின் தேவையை பூர்த்தி செய்யவில்லை. தினசரி பதினெட்டு மணித்தியாலங்களுக்கு பதிலாக ஒன்பது மணி நேர ஒலிபரப்பே விட்டு விட்டு காலை, பகல், இரவு என்று மூன்று கட்டமாக நடத்தப்பட்டு வருகின்றது. இதன் காரணமாக ஏனைய ஒன்பது மணி நேர ஒலிபரப்பை இப்பகுதியில் கேட்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அத்தோடு இவ் ஒலிபரப்பு திருப்தியற்றதாகவுமுள்ளது.

மன்னார் தள்ளாடி ஒலிபரப்பு அமைக்கப்பட்ட நாள் முதல் அது திருப்தியற்ற முறையிலேயே செயல்பட்டு வருகின்றது. டீசல் இயந்திரத்தால் செயல்படும் மின்சாரத்தைக் கொண்டு இயங்கும் இவ் ஒலிபரப்பானது, மந்தமாகவும் தெளிவற்றதாகவும் இருக்கிறது. மேலும் கடந்த 1987 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் தொடக்கம் ஜனவரிவரை 3 மாத காலமாக இது செயல்படாது இருந்து வந்தது குறிப்பிடத்தக்கது.

எம். ஜெ. எம். ஹில்மி

தற்போது சில நாட்களாகவும், வேறு வேளைகளில் ஒருமாதமாகவும் முழுமையாக செயல்படாது இவ் ஒலிபரப்பு நிலையம் இருந்துவிடுவதுண்டு. மேலும், ஒலிபரப்பின்போது ஆங்கில சேவை, சிங்கள சேவைகளது ஒலிபரப்பும் தமிழுக்குப் பதிலாக இங்கு ஒலிபரப்பப்படுவது இங்கு வழமையாகியும் விட்டது.

மேலும் இது விடயமாக 20 தடவைகள், சம்பந்தப்பட்ட தமிழ்ச் சேவைப் பணிப்பாளருக்கு எழுதியும் நிலைமையில் பயன் ஏற்படவில்லை; மேலதிகாரிகள் இவ்விடயத்தில் அக்கறைப்படுவதாகத் தெரியவில்லை.

வெகுஜன தொடர்பு சாதனங்களுக்குப் பொறுப்பான தகவல் துறை அமைச்சுடன் தொடர்பு கொண்டபோது, "தாங்கள் இது விடயமாக இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்துக்கு எடுத்துரைத்திருப்பதாகவும், கூட்டுத்தாபனம் இது விடயத்தில் அக்கறையுடன் செயல்படும் என்றும், மேலதிக பிரச்சினைகள் இருப்பின் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்துடனேயே தொடர்பு கொள்ளவும்" எனவும் பதிலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், அவர்கள் இவ்விடயத்தில் அக்கறை கொள்வார்களா என்பது எம்முன்னால் உள்ள கேள்விக்குறியாகும். வடக்கு — கிழக்கில் உள்ள மக்கள், அங்குள்ள நிலைமையின் காரணமாக வானொலி அனுமதிப் பத்திரக் கட்டணம் செலுத்துவதில்லை என்ற காரணத்தால், சம்பந்தப்பட்ட கூட்டுத்தாபனம் அக்கறையற்ற நிலையில் இருப்பதாகவும் சில வட்டாரங்கள் கருதுகின்றன.

### தெற்கில் தமிழ் ஒலிபரப்பின் நிலை

தென் மாகாணத்தில் உள்ள காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை ஆகிய பகுதியில் வாழும் தமிழ்பேசும் மக்கள் வானொலி அனுமதிப் பத்திரம் பெற்றே வானொலி நிகழ்ச்சிகளைக் கேட்டு வருகிறார்கள். ஆனால் அங்கும் தமிழ் ஒலிபரப்பைக் கேட்க முடிவதில்லை. காரணம், தமிழ் ஒலிபரப்பு அஞ்சல் நிலையம் அங்கு இல்லாததேயாகும். மேலும், காலி விரகெட்டிய பகுதிகளில் ஒலிபரப்பு நிலையங்கள் இருந்தும் தமிழ் ஒலிபரப்பு அங்கிருந்து நடைபெறுவதில்லை. றுகுணு பிராந்திய ஒலிபரப்பு நிலையத்திலிருந்தும் சில மணி நேர மாயினும் தமிழ் ஒலிபரப்பு நடைபெறுவதாகத் தெரியவில்லை.

ஊவா மகாணம், சப்ரகமுவா மாகாணங்களில் உள்ள பதுளை, மொனராகலை, ஆகிய பகுதிகளில் மகியங்கனை அஞ்சல் நிலையத்திலிருந்து சிங்கள நிகழ்ச்சிகள் நடைபெற்றாலும், தமிழ் ஒலிபரப்பு இல்லை. கேகாலை மாவட்டம் உட்பட சப்ரகமுவாவில் இரத்தினபுரி ஒலிபரப்பு அஞ்சல் நிலையம் அமைந்துள்ளது. ஆனால் அங்கும் தமிழ் ஒலிபரப்பு நடைபெறுவதில்லை. இதன் காரணத்தால், ஏக காலத்தில் பதினைந்து மாவட்டங்களில் தமிழ் மூலமான ஒலிபரப்பு இயங்கும் அஞ்சல் நிலையங்கள் இல்லாதிருப்பதினால், தமிழ் நிகழ்ச்சிகளை கேட்க முடிவதில்லை.

### கொழும்பு தலைமை நிலைய ஒலிபரப்பு

கொழும்பு தலைமையகத்திலிருந்து இயங்கும் தமிழ் மத்திய அலை ஒலிபரப்பு தற்போது 10 கிலோ வாட்ஸ் சக்தி உடையதாகவுள்ளதால், மேற்கு மாகாணத்தில் மாத்திரமே அந்த ஒலிபரப்பைக் கேட்கக் கூடியதாக உள்ளது. அவசர நடவடிக்கையாக கொழும்பு மத்திய அலை ஒலிபரப்பு 50 கிலோ வாட்ஸ் சக்தியாக அதிகரிக்கப்பட்டால் தெற்கு, சப்ரகமுவா, ஊவா மாகாணங்களில் கொழும்பில் உள்ளதுபோல் தமிழ் ஒலிபரப்பைக் கேட்க முடியும். இதன் காரணமாக தெற்கு, மலையகப் பகுதிகளில் தமிழ் ஒலிபரப்பு அஞ்சல் நிலையங்கள் அமைக்கப்படல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படாது. வடக்கு, கிழக்கில் வாழும் 25 லட்சம் மக்களுக்கென யாழ்ப்பாணம், திருகோணமலை, அம்பாறை நிலையங்களை மீண்டும் நிறுவுவதும் திருத்தமான சேவைக்கு இன்றியமையாததாகும். □

# சமூக முன்னேற்றச் சிந்தனை வளர சிந்தனைப் பண்பாடு அவசியம்

சமூக முன்னேற்றத்திற்கும் பெரும் சமூக மாற்றங்களுக்கும் சிந்தனைத் துறை சார்ந்த விழிப்புணர்ச்சி மிகவும் அத்தியாவசியமானது.

சிந்தனைத் துறையில் ஏற்பட்ட விழிப்புணர்ச்சியும், மறுமலர்ச்சியும் மத்திய கால ஐரோப்பாவை முடிவுக்கு கொண்டுவந்து, ஒரு புதிய ஐரோப்பா தோன்றக் கால்கோள் அமைத்தது. பிரான்சில் புரட்சி ஏற்பட முன்பு சிந்தனை அலைகள் வீசத்தொடங்கின 19 ஆம் நூற்றாண்டின் மத்தியில் ஐரோப்பாவில் முன் என்றும் இல்லாதளவிற்கு வளம் பொருந்திய பெரும் கருத்துப் போராட்டங்கள் எழுந்தன. ரஷ்யாவில் புரட்சி நிகழ்வதற்குக் கால் நூற்றாண்டுகளுக்கு முன்பே அனல்கக்கும் வாதப் பிரதிவாதங்களும், சிந்தனைப் புயலும் எழுந்தன.

மனித வாழ்வில் நெருக்கடிகளும் பிரச்சினைகளும் ஏற்படுவது இயல்பு; அவற்றிற்கெல்லாம் நாம் முகம் கொடுக்க வேண்டும். ஆனால் அவற்றை எல்லாம் எழுந்தமானமாக அணுகமுடியாது; அப்படி அணுகவும் கூடாது. ஒரு சமூக நெருக்கடியோ, பிரச்சினையோ தோன்றும்போது அதனை எவ்வாறு தீர்க்கலாம் என்ற பாதையை வகுப்பதுதான், அதனை அணுகுவதற்கான முதல்படி.

இப்படியான பாதைகளைக் கண்டறிந்து கொள்வதற்கு சிந்தனைத் துறை பெரிதும் வளர்ச்சி அடைய வேண்டும். போதிய கருத்துப் பரிமாற்றங்களும், கருத்து மோதல்களும் நிகழ வேண்டும். இவ்வாறு கருத்துப் பரிமாற்றங்களும் கருத்து மோதல்களும் நிகழ்வதற்கான முன்நிபந்தனையாக, சிந்தனைப் பண்பாடு நிலவவேண்டும். காத்திரமான சிந்தனைப் பண்பாடு நிலவத் தவறினால் சிந்தனை வளர்ச்சி ஏற்படமாட்டாது; சமூகமும் முன்னேற முடியாது.

அப்படியாயின் ஒரு நல்ல சிந்தனைப் பண்பாட்டை நாம் எவ்வாறு தோற்றுவிக்கலாம்? இதுவே எம்முன்னுள்ள முதல் கேள்வி. முதலில் ஒரு கருத்தைக் கருத்தாகப் பரிசீலிக்கும் பண்பை கருத்தைக் கருத்தால் எதிர்கொள்ளும் நாகரிகத்தை வளர்க்க வேண்டும். ஒரு கருத்தானது தனிப்பட்ட வெறும் சுய விருப்பு வெறுப்புக்களின் கைதியாக்கப் பட்டுவிடக் கூடாது. அதனை, எனக்கு வேண்டியவன் சொன்ன கருத்து, வேண்டாதவன் சொன்ன கருத்து என்று பாராமல் அதனை ஒரு கருத்து என்று எடுத்துக்கொண்டு, அது சரியான கருத்தா பிழையானதா? அல்லது எவ்வளவு தூரம் சரியானது எவ்வளவு தூரம் பிழையானது? அது ஏன் சரியானது அல்லது ஏன் பிழையானது? என்ற விளக்கங்களுக்கு உட்படுத்தவேண்டும்.

ஒரு மனிதன் முன்வைக்கும் கருத்து முழுக்க முழுக்கச் சரியானதாகத்தான் இருக்க வேண்டும் என்று எண்ணக் கூடாது. அது சரியானதாகவும் இருக்கலாம்; அல்லது பிழையானதாகவும் இருக்கலாம்; அல்லது சரியும் பிழையும் கலந்திருக்கலாம்; அல்லது நிறைவற்ற குறைபாடான கருத்தாகவும் இருக்கலாம். ஒருவரது கருத்தில் சரியானவை இருப்பின் அதனை ஏற்றுக்கொண்டு, பிழையை நிராகரிக்க வேண்டும். குறைபாடான கருத்துக்கள் இருப்பின் குறையைச் சுட்டிக்காட்டி முடியுமானால் அதனை நிறைவுபடுத்துவதற்குரிய கருத்தை முன்வைக்க வேண்டும்.

இத்தகைய பண்பாட்டுக்கு உதாரணமாக கார்ல் மார்க்ஸை எடுப்போம். சிந்தனையாளர் ஹெகல் என்பவருடைய கருத்துக்களின் மீது மார்க்ஸ் உடன்பாடும் முரண்பாடும் கொண்டிருந்தார். ஹெகலிடம் பிழையான கருத்து உண்டென்று கருதியபோதிலும் அவர் ஹெகலை முற்றுமுழுதுமாக நிராகரித்து விடவில்லை. தான் பிழையெனக் கருதிய ஹெகலின் கருத்துக்களைப் போதிய வாதங்களை முன்வைத்து நிராகரித்து, சரியானவற்றைஏற்று, அந்தச் சரியானவற்றிற்காக ஹெகலைப் புகழ்ந்துரைத்தார். உண்மையில் ஹெகல் அவரது கண்மூடித்தனமான விசுவாசிகளால் வரலாற்றில் நிலைநிறுத்தப்பட்டதை விட, அவரை விமர்சித்த மார்க்ஸால்தான் அதிகம் நிலைநிறுத்தப்பட்டார். அதாவது ஹெகலின் புகழை வளர்த்ததில் மார்க்ஸிற்குப் பெரும் பங்கு உண்டு என்பதைத்தான், சொல்கிறேன். எனவே ஹெகலின் கருத்திற் காணப்பட்ட பிழைகளுக்காக அவரையோ அல்லது அவரது கருத்துக்களையோ முற்று முழுவதுமாக நிராகரிக்காது, அதிலுள்ள சரியை ஏற்று மேலும் வளர்த்த பண்பைத்தான், இங்கு நாம் அவதானிக்க வேண்டும்.

□ சரண்யன் □

இதுபோலவே லெனின் காட்டிய ஒரு பண்பினையும் இங்கு சொல்லுதல் மிகப் பொருந்தும். லெனினுக்கும் பிளக்கானொவ் என்பவருக்குமிடையில் 1905ஆம் ஆண்டு வரை, கருத்தொற்றுமை பெரிதும் காணப்பட்டது. 1905 ஆம் ஆண்டு லெனினுக்கும் பிளக்கானொவ்விற்கும் இடையில் கருத்துவேறுபாடுகள் தோன்றின. இருவரும் இருவேறு அணிகளில் செயற்படத் தொடங்கினர். இதன் பின்பு லெனின் தலைமையிலான அணியினர் 1917 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்தனர். 1921 ஆம் ஆண்டு லெனின் தலைமையிலான அரசு, பிளக்கானொவ்வினால் முன்பு எழுதப்பட்டிருந்த இருமைவாதக் கண்ணோட்டத்தின் வளர்ச்சி என்ற நூலை வெளியிடத் தீர்மானித்தது. அந்த நூலைச் சிபார்சு செய்யும் ஒரு சிறுமுன்னுரையை, அந்நூலில் லெனின் எழுதினார். “இந்நூலில் ஓர் ஆயிரம் பிரதியல்ல, இலட்சக் கணக்கான பிரதிகள் வெளிவரவேண்டும். ஒரு மொழியிலல்ல பல மொழிகளில் வெளிவர வேண்டும். 1905 ஆம் ஆண்டின் பின்பு தான் பிளக்கானொவ் திரிபுவாதியானார். மார்க்ஸியத்தைப் படிக்க வேண்டுமென்றால், இவரின் இந்த நூலைப் படிக்கவேண்டும். இதனை நன்கு படிக்குமாறு உலகத் தொழிலாளர்களுக்கு நான் சிபார்சு செய்கிறேன்” என்ற அர்த்தம் உள்ள வாக்கியங்கள் அந்த முன்னுரையில் பொறிக்கப்பட்டிருந்தன.

தனக்கு எதிரியாகப்போன பின்பும்கூட, அவர் செய்த சரியானவற்றை மதித்துப் போற்றும் இத்தகைய சிந்தனைப் பண்பை நாம், பின்பற்றுவோமா?

ஒரு கருத்தைப் பரிசீலிப்பது என்பதற்குப் பதிலாக அக்கருத்துக்குரிய நபரை தனிப்பட்ட முறையில் இழிவுபடுத்துவது, முகங்கொடுத்துப் பேசமுடியாத நிலைக்கு ஒருவரையொருவர் தள்ளுவது, ஒரு கருத்தை ஒருவர் பிழையானது என்று சொல்வதாயின் அதற்குரிய காரணங்களை விளக்காது அக்கருத்தை முன்வைத்த நபரைப் பார்த்து “பிற்போக்காளன்” என்று முத்திரை குத்திக் கருத்தையே நிராகரித்து விடுதல், போன்ற செயல்கள் எல்லாம் எப்போதும் மிகவும் தவறானவையே.

ஒருவர் ஏதாவது ஒரு குழுவினருடன் பழகினால் அவருக்கு அந்தக் குழுமுத்திரையைக் குத்திவிடுவது, ஒரு குழுவினர் இன்னொரு குழுவினருடன் பழகுவதைத் துடக்காக-குற்றமாகக் கருதுவதுபோன்ற நிலைமைகள் சரியான சிந்தனையை வளர்க்க உதவப் போவதில்லை.

ஒரு கருத்தானது எத்திசையிலிருந்து வந்தாலென்ன, யாரின் வாயிலிருந்து வந்தாலென்ன, எக்குழுவிலிருந்து வந்தாலென்ன, அவற்றை முதலில் செவிமடுக்க வேண்டும். பின்பு பரிசீலிக்க வேண்டும். அதன் பின்பு சரியானவற்றை ஏற்று பிழையானவற்றை நிராகரிக்க வேண்டும். ஜேர்மனிய சிந்தனையாளர் நீட்சே என்பவருடைய கருத்துக்கள் என்னைப் பொறுத்தவரை பிழையானவை; அவரது கருத்துக்களை முழுமனதுடன் நிராகரிக்கிறேன். ஆனால் பிறருடைய கருத்துக்களைச் செவிமடுக்கும் அவரது பண்பை நான் வரவேற்கிறேன்.

“உனது கருத்தைப் பிழையெனக் கூறி நான் நிராகரிக்கிறேன். ஆனால் அதனைச் சொல்வதற்கான உனது உரிமைக்காக நான் போராடுவேன்” என்று, மகாத்மா காந்தி அடிக்கடி கூறுவது இங்கு நினைவில் நிறுத்திக் கொள்ளப்பட வேண்டிய ஒன்றே. எனவே, சமூகம் வளரவேண்டுமாயின் சிந்தனை வளரவேண்டும்; சிந்தனை வளரவேண்டுமாயின் சிந்தனைப் பண்பாடு வளரவேண்டும். □

# அனைத்துக்கட்சி மகாநாடும் நாடாளுமன்ற அமைப்பு முறையும்

தற்போது நடைபெற்று வரும் அனைத்துக் கட்சிகளின் மகாநாட்டில் சில கட்சிகள் நாடாளுமன்றத்தைக் கலைத்து விட்டு, அனைத்துக்கட்சிகளையும் கொண்ட இடைக்கால அரசு ஒன்றை அமைக்குமாறு கோரிக்கைவிடுத்துள்ளன. இங்கிலாந்தில் உருவாக்கப்பட்ட வெஸ்ற்மினிஸ்டர் முறைமை எமது நாட்டு அரசியல் சூழ்நிலைக்குப் பொருத்தமானதா என்பது பற்றிய இக்கருத்துப் பரிமாறல்கள், நீண்ட காலமாக விவாதிக்கப்பட்டு வந்துள்ளன. தற்போதைய சர்வகட்சி மகாநாட்டில் பௌத்த குருமார்கள் சங்கம், இலங்கையிலுள்ள அனைத்து அரசியல் கட்சிகளையும் கலைத்து விடுமாறு கோரிக்கைவிடுத்துள்ளது வேறு சில அரசியல் கட்சிகள் 1978 ஆம் ஆண்டு அமுலுக்கு வந்த இரண்டாவது குடியரசு யாப்பின்கீழ் உருவாக்கப்பட்ட, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்கிவிடுமாறு கோரிக்கை விடுத்துள்ளன. பிரெஞ்சு நாட்டின் ஜனாதிபதியாகவிருந்த டீகோல் அவர்களால் பிரெஞ்சு நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்ட இந்த முறைமையை, ஜே. ஆர். இலங்கையில் அறிமுகம் செய்தார். இம் முறைமையும் இலங்கை மக்களது பிரச்சினையைத் தீர்க்கவில்லை, என்பதே பொதுவான கருத்தாகும்.

இங்கிலாந்தின் நாடாளுமன்ற முறைமையும் எமது நாட்டு அரசியல் முறைமைக்குப் பொருந்தாதனவாகக் காணப்படுவதால், இவற்றில் மாற்றம் தேவை என்பதே இன்று நிலவுகின்ற கருத்தாகும். தென்னிலங்கையில் இக்கருத்து இன்று வலுவடைந்து வருகின்றது. தென்னிலங்கையில் நிலைமை இப்படியிருக்க வட-கிழக்கு இலங்கையில் அதாவது தமிழ் மண்ணில், ஒரு அமைதிப்புரட்சி ஒன்று இந்த ஆண்டின் முற்பகுதியில் இடம் பெற்றது. அதாவது

□ நேதாஜி □

இந்த ஆண்டு பெப்ரவரியில் இலங்கையில் இடம் பெற்ற பொதுத் தேர்தலின் போது, தமிழ்ப்பகுதிகளில் மிதவாதத் தலைமை முற்றாகத் தோற்கடிக்கப்பட்டு தமிழ்த் தீவிரவாத இளைஞர்கள் நாடாளுமன்ற அரசியலில் பிரவேசம் செய்தனர்.

இவ்வாறாக இடம் பெற்ற இந்த நாடாளுமன்ற அரசியல் மாற்றத்திலும் ஒரு புதுமையான நிகழ்வு இடம் பெற்றது. அதாவது, இதுவரை காலமும் நாடாளுமன்ற அரசியலில் தமிழ்த்தலைமை என்பது சட்டத்தரணிமார்களின் தலைமையாகவே இருந்து வந்த நிலைமை தலை கீழாக மாறி, ஒரு தமிழ் சட்டத்தரணிகூட இந்தப் பொதுத் தேர்தலில் எம். பியாகத் தெரிவு செய்யப்படாதது குறிப்பிடத்தக்கது. மேலதிக போனஸ் ரிக்கற் மூலம் சட்டத்தரணி அமிர்தலிங்கம் நாடாளுமன்றப் பிரதிநிதியாக உள்ளே நுழைந்தார். அவரின் அகால மறைவுக்குப் பின் சட்டத்தரணி மு. சிவசிதம்பரம் அந்த இடத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

சுருக்கமாகச் சொன்னால் 1910ஆம் ஆண்டு பாரிஸ்டரான சேர். பொன். இராமநாதன் இலங்கை முழுவதற்கும் சட்டசபை அங்கத்தவராக தெரிவு செய்யப்பட்ட போது, தமிழ்மக்களுக்கும் அவரே தலைவராகக் கணிக்கப்பட்டார். அவரின் பின் தமிழ்த்தலைமையை ஏற்றுக் கொண்ட ஒணரபிள் பாலசிங்கம், ஜி.ஜி. பொன்னம்பலம், எஸ். ஜே.வி. செல்வநாயகம், அமிர்தலிங்கம் வரை எல்லோருமே சட்டத்தரணிகளாகவே இருந்துள்ளனர். ஏறக்குறைய எண்பது ஆண்டுகளாக இருந்துவந்த இந்த சட்டத்தரணிகள் தலைமையை முற்றாக மாற்றியமைத்த கடந்த நாடாளுமன்றப் பொதுத்தேர்தல், தமிழ் அரசியல் தலைமையில் ஒரு சூழியல் அமைதிப்புரட்சி என்றும் வர்ணிக்கப்படுகிறது. □

## உணர்வுகளை...

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதிர்ஷ்டமே, இந்தக் கலை வெளியீட்டுக்குக் காரணமாய் இருந்துள்ளது என்பதும் கவனிப்புக்குரியது.

விஸ்வலிங்கம் அவர்கள் பிரபலம் மிக்க தென்னிலங்கை ஓவியர்கள் – குறிப்பாக கீற்ஸ் (Keyts) – இசைக்கலைஞர்கள், வாத்தியக்காரர்கள், நாட்டியக்காரர்கள் என்று பலதரப்பட்ட கலைஞர்களோடு பழகும் சந்தர்ப்பம் பெற்றுள்ளார். அவர்களின் — முக்கியமாக சிங்களக் கிராமியப் பண்பாட்டின் சிறிதளவு செல்வாக்கு அவரது மரச் சிற்பங்களில் காணக்கூடியதாய் உள்ளது. பொதுவாக அவரது பெண் சிற்பங்கள் இடையில் குடத்தோடு தாவணியற்ற கோலத்தோடு தெரிவது, ஆற்றை நோக்கித் தண்ணீர் மொண்டு வரப் போகும் சிங்களப் பெண்களையும், அவரது முகங்கள் முகமூடிகளோடு வரும் சிங்கள நாட்டியக்காரர்களையும் தெருக்கூத்தாளர்களையும் நினைவூட்டுவனவாய் உள்ளன. இதுபற்றி விஸ்வலிங்கம் அவர்கள் விளக்கியபோது "ஒரு இனத்தின் தனியான கலையென்று எதையும் கூறமுடியாது. உலகின் சகல இன மக்களதும் உணர்வுகளும் கலைப் பெறுமானங்களும் ஓர் உயர்ந்த கலைச் சிருஷ்டியில் மூர்த்தம் பெறுகின்றன" என்று கூறியது ஒரு ஆழமான கலைப்பார்வையே எனலாம்.

அவர் வடித்துள்ள 'கண்ணன்', 'அனுமான்', லக்ஷ்மி என்ற நமது பண்பாட்டுக்குப் பழக்கப்பட்ட படிமங்கள்கூட வேறுன மன உணர்வுகளிலேயே அவரிடம் மூர்த்தம் பெற்றுள்ளமை, அவரது தனித்துவத்திற்கு எடுத்துக்காட்டு. வெறுப்பைப் படம் பிடிக்கும் பலவித முகபாவச் சிற்பங்கள் பற்றி அவர் கூறியபோது, "அசிங்கத்திலும் ஓர் அழகிருப்பதை நான் உணர்கிறேன்" என்றூர். சிற்பி விஸ்வலிங்கம் அவர்கள் குள்ளமான உருவமுடையவர். ஆனுல் அவரது மரச்சிற்பங்கள் நெட்டையாகவே உள்ளன. இதுபற்றி கவிஞர் சு.வி. "ஒரு குட்டையான மனிதரின் நெட்டைக் கலைக்கனவுகளோ இவை?" எனப் பகிடியாகக் கூறியபோது, அவர் வாய் விட்டுச் சிரித்தார்.

இத்தகைய சிறந்த கலைஞரை இனங்கண்டு, அவரை இங்கு அறிமுகப்படுத்தியதில் பெரும் பங்கு, பிரபல ஓவியரும் சிற்பக் கலைஞருமான அ. மாற்கு அவர்களுக்கே உரியது. □

## புதியதொரு...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

தன் நடிப்பால் கொணர்ந்த உணர்வை, அதைத் தொடர்ந்து வந்த இசை மழுங்கடித்தது போல் இருந்தது.

இந் நாடகத்தின் மூலப் பிரதி ஏழு காட்சிகளைக்கொண்டிருந்தபோதும், இவை அனைத்தும் ஒரே காட்சியிலேயே நடைபெற்றன. நாடகம் பகல் வேளை நடைபெற்றமையினுல் ஒளியூட்டப்பட்ட மேடை ஏற்படுத்தும் கவன ஈர்ப்பை, இந்த மேடை அவ்வளவாக ஏற்படுத்தவில்லை. மூலப் பிரதியில் கொடுக்கப்பட்டிருக்கும் பொட்டொளிப் பாவனைக்கான குறிப்புகளும் பயன்படுத்தப்பட்டிருப்பின், சிறப்பாக இருந்திருக்கும். மேடை திறமையாகக் கையாளப்பட்டிருந்தபோதும் மேற்கூறிய காரணங்களால், மேடையும் ஒளியும் ஏற்படுத்தக்கூடிய தாக்கம் முழுமையாகப் பெறப்படவில்லை.

இரண்டாவது தடவையாக வந்த புயல், இடி, மின்னல் காட்சி மயிலியின் மனப்போராட்டத்தினையே குறித்து நின்றது. ஆரம்பத்தில் ஆழமான உணர்வுத் தாக்கத்தினை ஏற்படுத்திய இக்காட்சியில், பெண் நடனக்காரரின் வருகையுடன் தாக்கம் சடுதியாகக் குறைந்தது. இந்த இடத்தில் அவர்கள் வந்திருக்கக் கூடாதென்றே தோன்றுகிறது.

நீண்டகாலம் அலைந்து திரிந்த மாயன் வீடுவந்து சேருகிறுன். அவனது மனைவி மயிலி மறுமணமாகி குழந்தையும் ஈன்றெடுத்த நிலையில், அவனை எதிர்கொள்கிறுள். இதுவே நாடகத்தின் உணர்வுச்ச நிலை. இந்த இடத்தில் உணர்வுகள் வழுவாது தக்க பரிமாணத்தில் கொணரப்படவேண்டும். இந்த இடத்தில் எழுத்து மூலப் பிரதியில் சிறிய மாற்றத்தினை, நெறியாளர்கள் அறிமுகப்படுத்தியுள்ளார்கள். மாற்றத்தின்படி, கணவனைக் கண்டவுடன் ஏணையில் இருக்கும் குழந்தையை மயிலி சென்று பார்க்கிறுள். அதைத் தொடர்ந்து மாயனும் சென்று பார்க்கிறுன். இதனுல், உரையாடல் இல்லாமலேயே காட்சி நிகழ்வோட்டத்தினூடாக அச்சூழலின் மனநிலை, உணர்ச்சிகள், பார்வையாளனுக்குத் திறம்பட வெளிப்படுத்தப்பட்டது. இச்சிறிய மாற்றத்தினூடும், நாடகத்தை ஓர் ஊடகமாகப் பயன்படுத்துவதில் நெறியாளர்களுக்கிருக்கும் பரிச்சயத்தன்மையும் திறமையும், நன்கே வெளிப்பட்டன.

இத்தனை இடர்பாடுகளின் மத்தியிலும் நம்பிக்கையுடன் இந்த நாடகத்தை அளித்த யாழ். பல்கலைக்கழக நுண்கலைத் துறையினர், பாராட்டுக்குரியவர்களே. □

## அர்ப்பணி...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஞல் பெரும் பலன் கிடைக்க வேண்டும் என்று எதிர்பார்த்ததிலும் அர்த்தமில்லை. 1970 களுக்கு முன் பிரச்சினை பெரும் பகைமை அடையாத நிலையில், முழு அளவில் அகிம்சைப் போராட்டத்தைச் செய்திருக்கவில்லை என்ற உண்மையை நாம் முதலில் ஒப்புக்கொள்ள வேண்டும். சிங்கள மக்களின் மனச் சாட்சியைக் கிளறக்கூடிய வகையிலும் உலகின் மனச்சாட்சியைத் தூண்டக்கூடிய அளவிலும் எமது அகிம்சைப் போராட்டத்தின் காத்திரத் தன்மை அக்காலத்தில் அமைந்திருக்கவில்லை என்பது பல அகிம்சைவாதிகளின் அபிப்பிராயம். இத்தகைய தொடர் போக்கின் காரணமாக — உண்மையான அர்ப்பணிப்பற்ற — தனது தலைமையை கூட்டணியால் தொடர்ந்து தக்க வைக்க முடியவில்லை. உண்மையான அர்ப்பணிப்புக்கே மக்கள் எப்போதும் தலை வணங்குவர் என்ற உண்மையை, அன்று தலைமை தாங்கியோர் புரிந்து கொண்டிருக்கவில்லை. □

# நிகழ்வுகள்

### 19-9-89 செவ்வாய்

யுத்தநிறுத்த விதிமுறைகள் பற்றி அமைதிப்படைத்தளபதி லெப்டினனட் ஜெனரல் ஏ. எஸ். கல்கத் அறிக்கை ஒன்றை வெளியிட்டார். இதில், ஆயுதங்களை யார் யார் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவார்கள்என்ற விபரம்தெரிவிக்கப்பட்டுள்ளது □ இரண்டு ஆயுதக் குழுவினரிடையில் நீர்வேலியில் மோதல் நிகழ்ந்தது □ தென்னிலங்கையில் ஐ.தே.க. ஆதரவாளர்கள் 17 பேர் கொலையுண்டனர் □ சமாதானத்திற்காக ஒருவர் எத்தியாகத்தையும் செய்யத் தயாராக இருக்க வேண்டுமென, நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் பேசுகையில் ஜனுதிபதி தெரிவித்தார் □ கம்பஹா பொலிஸ் நிலையத்திற்கு அருகே கார்க்குண்டு வெடித்ததில் இருவர் பலியானுர்கள்; 23 பேர் காயமடைந்தனர் □

### 20-9-89 புதன்

வடக்கு – கிழக்கில் அமைதிப்படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான யுத்த நிறுத்தம் காலை 6.00 மணிக்கு ஆரம்பமாகியது. யுத்த நிறுத்தத்திற்கு இணக்கம் தெரிவித்து விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் பிரிவு, லண்டனில் அறிக்கை வெளியிட்டது □ தமிழை நடைமுறைப் படுத்துவதிலுள்ள தடைகளை நீக்கும்படி, ஈழத் தொழிற் சங்க சம்மேளனம் ஜனுதிபதியிடம் கோரிக்கை விடுத்தது □ சிகரட் விலையதிகரிப்பால் பாவனை குறையப்போவதில்லையென, தினேஷ் குணவர்த்தன எம்.பி. நாடாளுமன்றத்தில் தெரிவித்தார் □ தெஹிவளையில் தேடுதல் நடத்தியவேளை பொலிசார் சுட்டதில் 2 பேர் கொல்லப்பட்டனர் □ தென் பகுதிப் படுகொலைகள் குறித்து கண்டனம் தெரிவிக்கும் அறிக்கையொன்றை, ஈ.பி.ஆர்.எல்.எவ். வவுனியாவில் வெளியிட்டது □

### 21-9-89 வியாழன்

யாழ். மருத்துவபீட விரிவுரையாளர் ராஜினி திரணகம சுட்டுக்கொல்லப்பட்டார் □ வட – கிழக்கு மாகாண சமாதானக் குழுவில் 17 கட்சிகளின் 51 உறுப்பினர்கள் இடம்பெறுவார்களெனத் தெரிவிக்கப்பட்டது □ தற்போது அறிவிக்கப்பட்டுள்ள யுத்த நிறுத்தத்தை வரவேற்று, புளொட் இயக்கம் அறிக்கையொன்றை விடுத்தது □ கடந்த 7 வருட சம்பவங்கள் மூலம் நாம் பாடங்கற்க வேண்டும் என, சுதந்திரக்கட்சி உறுப்பினர் கே.பி.இரத்னுயக்கா நாடாளுமன்றத்தில் குறிப்பிட்டார் □ தேசியப் பிரச்சினையைத் தீர்க்காது நாட்டில் அமைதியை ஏற்படுத்த நினைப்பது பகற் கனவு போலாகும் என, யாழ். மாவட்ட எம்.பி. க. பிரேமச்சந்திரன் நாடாளுமன்றத்தில் கூறினுர் □ தொங்குபாலம் அறுந்ததில் மஸ்கெலியாவில் 5 பெண்கள் பலியாகினர்; 26 பேர் ஆபத்தான நிலையில். □

### 22-9-89 வெள்ளி

யுத்த நிறுத்தம் அமுலுக்கு வந்தபின் யாழ்குடா வீதிகளில் மக்கள் நடமாட்டம் அதிகரித்தது; இராணுவ சென்றிகள் பல அகற்றப்பட்டன □ மொழிவாரி மாகாணங்களைக் கொண்ட சுவிஸ் 'கன்ரன்' முறையே இலங்கையில் அமையவேண்டுமென, அனைத்துக் கட்சி மாநாட்டின் மூலம் தாம் கோரியிருப்பதாக, ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணித் தலைவர் த. சித்தார்த்தன் செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார் □ அ. அமிர்தலிங்கத்துக்கு அனுதாபம் தெரிவிக்கும் பிரேரணை மீது, பல கட்சிகளையும் சேர்ந்த முக்கியஸ்தர்கள் நாடாளுமன்றத்தில் உரையாற்றினர் □ மொரட்டுவ பல்கலைக்கழக உபவேந்தரின் படுகொலையைக் கண்டித்து, பல்கலைக்கழக ஆசிரியர்சங்கங்களின் சம்மேளனம் அறிக்கை வெளியிட்டது. 'அறிவார்ந்த சமூகத்துக்கு எதிராக துப்பாக்கிகள் நீட்டப்பட்டுள்ளன' என, அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது □

### 23-9-89 சனி

இடைக்கால அரசை அமைக்க தமிழர் குழுக்களின் ஆதரவைத், தென்னிலங்கை அரசியல் கட்சிகள் திரட்டிவருவதாக, செய்தி வெளியானது □ அமைதிப்படை விலகல் விவகாரத்தில் ராஜீவ் காந்தி கூறுவதையே முக்கியமாகக் கருத்திற் கொள்வோம்: பேச்சாளர்களின் கருத்துக்களைப் பெரிதுபடுத்த முடியாது என, அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன தெரிவித்தார் □ வட-கிழக்குப் போக்குவரத்துச் சபைகளைக் கையேற்பதற்காக வட – கிழக்கு மாகாண சபை நிறைவேற்றியசட்டமூலத்தை, ஆளுனர் நிராகரித்துள்ளார் என செய்தி வெளியானது □ பயிற்சிக்கு ஆள் திரட்டும் நடவடிக்கை ஒரு சிக்கல் நிலையை உருவாக்கி விட்டது. ஆனுல் தமிழரின் நீண்ட கால நலனைக் கருத்திற் கொண்டு மக்கள் விரும்பாத இந்த முடிவைச் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறதென, ஈ.பி.ஆர்.எல்.எவ் முக்கியஸ்தர் எல். கேதீஸ்வரன் தெரிவித்ததாக, செய்தி வெளியானது □

### 24-9-89 ஞாயிறு

வடக்கு – கிழக்கு மகாணத்துக்கென தனியான பொலிஸ் படை நிறுவப்படுமென, முதல்வர் அ. வரதராஜப் பெருமாளிடம் அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன திருமலையில் உறுதியளித்தார் □ இந்திய பிரதித் தூகர் ரத், ரெலோ முக்கியஸ்தர்களை திருமலையில் சந்தித்துப் பேச்சு நடத்தினுர் □ எதிர்கால நன்மைகருதி தமிழ் இயக்கங்களை ஒன்றுபடுத்த வேண்டுமென, தன்னைச் சந்தித்த ஈரோஸ் தலைவர்களிடம் தொண்டமான் வேண்டுகோள் விடுத்தார் □ காலை, அங்கொடைப் பகுதியில் பொலிசார் தேடுதல் நிகழ்த்தியபோது வீடொன்றிலிருந்து 1 ரி – 81 றைபிள், 5 எஸ்.எல்.ஆர்.றைபிள்கள், 8 துவக்குகள், தோட்டாக்கள், வெடிக்கவைக்கும் கருவிகள் போன்றவற்றைக் கைப்பற்றினர் □

## புதிய ராஜகாரிய முறை?

யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கிராம சேவை உத்தியோகத்தர்கள் ஜனசக்தி அட்டை விநியோகிக்கும் வேலையை ஆரம்பித்துள்ளனர். குடும்பத்தின் உணவு மற்றும் மண்ணெண்ணெய் முத்திரைகளையும் எடுத்துக் கொண்டு ஒக்ரோபர், நொவம்பர் ஆகிய இரண்டு மாதங்களுக்கு மாத்திரம் ஜனசக்தி அட்டைகள் வழங்கப்படுகின்றன. ஏலவே அறிவித்த திட்டத்தில் சிறிய மாற்றங்களுடன் ஜனசக்தித் திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது.

கிராம சேவகர் பிரிவு மட்டத்தில் இயங்கும் முகவர் குழுக்களின் பணிப்புரைக்கிணங்க ஜனசக்தி உரிமையாளர் மாதத்தில் நான்கு நாட்கள் 'கட்டாய வேலை' செய்ய வேண்டும். மற்ற நாட்களில் தம் சுயதொழிலைச் செய்யலாம். கட்டாய வேலை சிரமதான அடிப்படையிலும் இடம் பெறலாம். ஊதியம் பெற்ருல் அந்தப் பணம் வங்கியில் வைப்பில் இடப்பட்டு, பொது விடயங்களுக்குச் செலவிடப்படுமாம். இத்திட்டம் சாரகம திட்டம் என்று அழைக்கப்படுகிறது.

இது பழைய ராஜகாரிய முறையை ஞாபகமூட்டுகிறது.


## நூலகவியல்

### காலாண்டுச் சஞ்சிகை

ஆசிரியர்: என். செல்வராஜா

வெளியீடு: அயோத்தி நூலக சேவைகள், ஆனைக்கோட்டை.

ஆண்டுச் சந்தா: ரூபா 30-00 (தபாற்செலவு உட்பட)

நூலகவியற்துறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும், நூலார்வம் மிக்கவர்களுக்கும் ஏற்ற கட்டுரைகளையும், செய்திகளையும் தாங்கி 1985-ம் ஆண்டு முதல் வெளிவருகின்றது.

தொடர்பு: என். செல்வராஜா, நூலகர்
இவ்லின் இரத்தினம் நிறுவனம்
பல்கலைக்கழக ஒழுங்கை, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

A-22

திசை
THISAI

# அமெரிக்காவின் கோரிக்கை:
# சோவியத் சம்மதம்

பல தரப்பு ஒப்பந்தம் மூலம் பத்து ஆண்டுக்கால எல்லைக்குள் உலகிலுள்ள இரசாயன ஆயுதங்களை முற்றாக அழித்துவிடும் திட்டம் ஒன்றுக்கு அமெரிக்கா தயாராக உள்ளதாக, செவ்வாய்க் கிழமை அமெரிக்கா அறிவித்தது. அமெரிக்காவின் இந்த அறிவித்தல் வெளியாகிச் சில மணித்தியாலங்களுக்குள்ளான சோவியத்தின் சம்மத அறிவிப்பு, மேலும் ஒரு படி முன்னேற்றமானதாய் அமைந்தது.

பல தரப்பு ஒப்பந்தம்வரை அதற்கு நாம் காத்திருக்கத் தேவையில்லை. அமெரிக்கா உண்மையாகவே இரசாயன ஆயுதங்களை அழிக்க விரும்பினால், இரு தரப்பு ஒப்பந்தம் மூலம் அதனை உடனடியாகவே ஆரம்பிக்க சோவியத் சம்மதம் தெரிவித்துள்ளது.

இரசாயன ஆயுதங்களை ஒழிப்பதில் இவ்வளவு போட்டி அக்கறை இருப்பது, மகிழ்ச்சி அளிக்கும் விடயம்தான். அதே வேளை அமெரிக்காவுக்கும் சோவியத்துக்கும் இடையில் ஓர் இராஜதந்திர யுத்தம் நிகழ்வதனையும் அதன் உண்மைப் பரிமாணங்களையும், அரசியற் பரிபாஷைக்கூடாக நாம் புரிய முயலவும் வேண்டும்.

## திசைமுகம்

*''சுதந்திர ஒளியினில் மனங்குளி
அதன்வழி திசையெலாம் துலங்கவே''*

### அமைதி மீறல்கள்

வட, கிழக்குப் பகுதிகளில் இம்மாதம் 20ஆம் திகதி காலை அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட யுத்த நிறுத்தச் செய்தி, மக்கள் வயிற்றில் பாலை வார்த்த குளுமையை ஊட்டியதில் வியப்பில்லை.

துப்பாக்கி வேட்டுகளுக்கும் குண்டுகளுக்கும் மரணங்களுக்கும் துயரங்களுக்குமிடையில் போராடிக்கொண்டிருந்த மக்கள் முகங்களில் ஒரு வெளிச்சம். இத்தனை காலம் அனுபவித்து வந்த அமைதியின்மைக்குத் தீர்வு வந்துவிட்டது போன்ற ஓர் அமைதி.

இருந்தாலும் மக்களின் அடிமனதில், 'இந்த இடைக்கால அமைதி நீடிக்குமா? இது ஒரு முழுமையான தீர்வுக்கு வழி வகுக்குமா?' என்பன போன்ற சந்தேக நெருடல்களே அதிகம். காரணம் இதற்கு முன்னரும் இத்தகைய் யுத்த நிறுத்தங்கள் நேர்ந்து குழம்பிப்போயின என்பது மட்டுமல்ல, தற்போதைய யுத்த நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டமை காயும் முன்னரே, யுத்த நிறுத்த மீறல்கள் துருத்தத் தொடங்கிவிட்டன.

இது சாதாரண துருத்தல் அல்ல. மிகக் குரூரமான துருத்தல். பாதைகளில் தலைகள் துண்டிக்கப்பட்ட மனித உடல்கள், தனி நபர்கள் சுட்டுக்கொல்லப்படும் பயங்கரம், இரண்டு திஙைகளுக்கு முன் பண்டத்தரிப்பில் நிகழ்ந்த அசம்பாவிதங்கள்.

இவை எவற்றின் அறிகுறிகள்?

இனி வரப்போகும் பேரழிவின் ஒத்திகையா இவை? யுத்தத்திலும் அராஜகத்திலும் ஊறிப்போய்விட்ட நமக்கு, அமைதியும் இணக்கமும் அந்நியமாகிவிட்டன என்பதன் அறிகுறியா இவை?

அமைதியையும் சந்தோசத்தையும் எதிர்பார்த்த மக்கள் மனதில் மீண்டும் சோர்வு.

மீண்டும் மீண்டும் தமிழ் பேசும் இனம் அழிவுக்குள் சிக்கிக்கொள்ளுமாயின் அதன் விடுதலையும் அமைதியும் எட்டாத் தொலைவுக்குத் தள்ளப்பட்டுவிடும் என்பதில் ஐயமில்லை.

நமது குரோதங்களும் சண்டைகளும் குளத்தைக் கலக்கி பருந்துக்கு இரையாக்கியதாக அமையக் கூடாது. அப்படி அமையுமாயின் நமது இனத்தின் விடுதலையைப் பெற்றுத்தர எதிர்காலத்தில் ஆட்களே இருக்கமாட்டார்கள்.

## 30 - வது சிரார்த்த தினம்

இம்மாதம் 26 ஆம் திகதி எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவின் 30 ஆவது சிரார்த்ததினம் அனுஷ்டிக்கப்பட்டது.

1959 ஆம் ஆண்டு, தன்னைப் பார்க்க வந்திருந்த சோமராம என்னும் புத்த பிக்குவை வரவேற்றுக் கதைக்கத் தொடங்கியபோது, அதே புத்தபிக்குவால் அவர் சுட்டுக் கொல்லப்பட்டார். பிரதமர் என்னும் வகையில் கொல்லப்பட்ட முதலாவது நபர் இவராவர்.

## கூட்டறிக்கையை அமுல்படுத்த வேண்டும்

— அ. வரதராஜப்பெருமாள்

இப்போது பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஒரேயொரு வழி இலங்கை - இந்திய அரசுகள் இணைந்து வெளியிட்ட கூட்டறிக்கையை அமுல்படுத்துவதிலேயே உள்ளது என, வடக்கு - கிழக்கு மாகாண முதல்வர் வரதராஜப்பெருமாள் கூறியுள்ளார்.

அவ்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளவற்றை அப்படியே வரிக்குவரி அமுல்படுத்த வேண்டுமென்றும் அவர் கூறியுள்ளார்

## ஊவா மாகாணத்தில் தோட்டங்கள் எரிப்பு

தென் பகுதியில் ஜே.வி.பி. யினரின் தூண்டுதலின் பேரில் நிகழ்ந்துவரும் வன்செயல்கள், இலங்கையின் பொருளாதாரத்தை நேரடியாகவே நாசம் செய்யும் புதிய நடவடிக்கைகளைக் கொண்டதாக மாறிவருகிறது. இரண்டு தினங்களுக்கு முன் ஊவா மாகாணப் பகுதியில் உள்ள 3 றபர் தோட்டங்கள், தொழிற்சாலைகள், 9 தேயிலைத் தோட்டங்கள் தொழிற் சாலைகள், 2 லட்சம் கிலோ தேயிலை ஆகியவை எரித்து நாசமாக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இத்தனை நாசவேலைகளுக்கும் நியாயம் கற்பிப்பதுபோல், தொழிலாளர்களுக்கு 2500 ரூபா சம்பளமாகக் கொடுக்கப்படவேண்டும் என்றும் மேற்படி நாசவேலைக்காரர்கள் அறிவித்துள்ளனர்.

## இரண்டாவது சிரார்த்த தினம்

சில அரசியல் கோரிக்கைகளுக்காகச் 'சாகும்வரை' உண்ணுவிரதம் இருந்து உயிர்நீத்த திலீபனின் சிரார்த்ததினம் இம்மாதம் 26ஆம்திகதி நினைவு கூரப்பட்டது.

இலங்கையில் உண்ணுவிரதம் இருந்து காலமான முதல் நபர் இவர் ஆவார்.

1956 ஆம் ஆண்டு, தோடம் பழச் சாற்றுடன் சாகும்வரை உண்ணுவிரதத்தைதொடர்ந்த முதல் நபர் பேராசிரியர் எவ். ஆர். ஜயசூரியா ஆவார்.

இவரது உண்ணுவிரதம் பிரதமர் பண்டாரநாயக்காவின் தலையீட்டினுல், மூன்றும் நாள் கைவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## மாண்டவர் மீண்டார்!

யாழ்ப்பாணக் கல்விப் பணிப்பாளரான செல்வி தி. பெரியதம்பி அவர்கள் நெல்லியடியில் வைத்து ஓர் இயக்கத்தைச் சேர்ந்தவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டதாக, இந்திய வானொலி அறிவித்தது தெரிந்ததே. ஆனுல் இச் செய்தி தவறுனதென, பின்னர் இந்திய வானொலியே கடந்த செவ்வாய் அறிவித்துள்ளது.

## மாகாண அரசு கலைக்கப்படும்

விடுதலைப்புலிகள் ஜனநாயக வழிக்குத் திரும்பி, அரசியலில் ஈடுபடுவார்களானுல், மாகாண அரசை தாம் கலைத்துவிட்டு புதிய தேர்தலுக்கு முகம் கொடுக்கத் தயாராய் இருப்பதாய் மாகாண முதல்வர் வரதராஜப் பெருமாள் கூறியுள்ளதாக இந்திய வானொலி அறிவித்துள்ளது.

## பத்திரிகையாளர் மரணம்

மலேசியாவின் இலங்கைத் தூதுவர் பதவிக்கு நியமிக்கப்படவிருந்த பிரபல பத்திரிகையாளரான திரு. ரெஜி மைக்கல் திங்களன்று மாரடைப்புக் காரணமாக, கொழும்பு பெரிய ஆஸ்பத்திரியில் காலமானுர்.

## சங்கானை தெ. ப. பொ. கூ. சங்கத்தில் உயர்அதிகாரிகள் பரிசீலனை

சங்கானை தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனைக் கூட்டுறவுச் சங்கம் தனது வருமானத்தில் ஒரு பகுதியான ரூபா மூன்று லட்சத்தை, வழக்கம்பரையிலுள்ள தனியார் கடையொன்றிற்கு வட்டிக்கு வழங்கியுள்ளது. இதில் ரூபா ஒரு லட்சத்தை மாத்திரம் மீளப்பெற முடிந்ததாம். இது முன்னைநாள் தலைவரின் நிர்வாகத்தில் இடம்பெற்ற சம்பவமாகும். புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட தலைவரும், நிர்வாகமும் இத்தொகையை மீளப்பெறும் முயற்சியில் இறங்கியுள்ளனர். சங்கத்தின் இந்தக் கொடுக்கல் வாங்கல் நடவடிக்கை கூட்டுறவு உப விதிகளுக்கு முரணுனதாகும். இந்தத் தொகை ஊழியரின் சேமலாபத்துக்கென வங்கியில் வைப்புவைக்க வேண்டிய பணமாகும்.

சென்ற வெள்ளியன்று, கூட்டுறவு உயர் அதிகாரிகள் குழு திரு. லிங்கநாதன் தலைமையில் மேற்படி சங்கத்தின் கணக்குகளைப் பரிசீலனை செய்தது. வருடாந்தக் கணக்கெடுப்புகளின்போது ரூபா இரண்டு லட்சத்துக்கான காசோலையைக் கணக்கில் வைத்துக் காட்டிவிட்டு, திரும்பவும் சம்பந்தப்பட்ட கடைக்கு அதைக் கொடுத்தமை பாரிய குற்றமாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. முறைப்படி இந்தக் காசோலையை வங்கியில் சமர்ப்பித்திருக்க வேண்டுமாம். மேற்படி தொகைக்கான வட்டியிலும் சில ஒழுங்கீனங்கள் நடந்துள்ளதாம். இந்தப் பணப் பரிவர்த்தனைக்கு உடந்தையாக இருந்த சில கூட்டுறவுச் சங்க காரியாலய ஊழியர் மீதும் நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது.

## ராஜினி திரணகம சுட்டுக்கொலை

யாழ். பல்கலைக்கழகத்தின் மருத்துவப் பகுதியின் உடற்கூற்றியல் துறைத்தலைவர் வைத்திய கலாநிதி ராஜினி திரணகம கடந்த வியாழக்கிழமை இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார். உடற் கூற்றியல் துறைத் தலைவராகக் கடமையாற்றிய திருமதி திரணகம, இத்துறையில் நிபுணத்துவம் பெற்றவர் என்பதோடு பல்கலைக்கழக மனித உரிமைக் குழுவின் நடவடிக்கைகளிலும் அக்கறை கொண்டிருந்தார் என்பதும், குறிப்பிடத் [illegible]

### ராஜினி...

(1ஆம் பக்கத்தொடர்ச்சி)

தொடர்ந்து துக்க நிலையை அனுட்டிக்கும் என்றும் தீர்மானித்துள்ளது.''

இதுபற்றி யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் அறிக்கை கூறுவதாவது:

திருமதி ராஜினி திரணகமவின் மரணம் யாழ். பல்கலைக் கழகத்துக்கு மட்டுமன்றி, முழுத் தமிழ்பேசும் சமூகத்துக்கும் ஒரு பாரிய இழப்பாகும். உண்மையான சமூகப்பிரக்ஞை கொண்ட இவர், 1987 ஒக்ரோபர் இராணுவ நடவடிக்கையின் பிறகு பல்கலைக்கழகம் மீண்டும் திறக்கப்படுவதற்கு முக்கிய பங்காற்றியவர். மேலும், பல்கலைக்கழக மட்டத்தில் மனித உரிமைக்கான பணிகளை முடுக்கிவிட்டதோடு, இவர் மனித உரிமை மீறல்கள் பற்றிக் கொடுத்த தகவல்கள் 'சர்வதேச விழிப்புச் சபை', 'மன்னிப்புச் சபை' போன்றவற்றின் கௌரவ அங்கீகாரத்தையும் பெற்றன.

துரிதமாக விற்பனையாகிறது!
**நங்கை**
மாதர் மாத இதழ்
விலை ரூபா 10/-
பத்திரிகை விற்பனையாளரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

இப்பத்திரிகை, இல. 118, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்திலுள்ள நியூஈரா பப்ளிகேஷன்ஸ் நிறுவனத்தால் 29-9-1989இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது
Registered as a newspaper at the General Post Office, Sri Lanka, Under Q. J. 78/89.